Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 28

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

18 ஷவ்வால் 1438 ஹிஜ்ரி கமரி 13 வஃபா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
13 ஜூலை 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர்கள் இறைவனோடு இருக்கிறார்களோ அவர்களுக்காகவே அவன் பாதுகாவலனாகி விடுகிறான். ஆனால் நீங்கள் இறைவன் பக்கம் வாருங்கள். அவனோடுள்ள ஒவ்வொரு எதிர்ப்பையும் விட்டு விடுங்கள். அவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் எவ்வித சோம்பலையும் காட்டாதீர்கள். அவனது படைப்பினங்களுக்கு நாவைக் கொண்டோ அல்லது கரங்களைக் கொண்டோ அநியாயம் செய்யாதீர்கள். மேலும் வானத்தின் கோபத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சிக் கொண்டிருங்கள். இதுவே உங்களின் இரட்சிப்பிற்கான சரியான மார்க்கமாகும்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

தலைவர்களே! அரசர்களே! செல்வந்தர்களே! உங்களிடையே இறைவனுக்கு அஞ்சுகிறவர்களும் அவன் காட்டித் தந்த எல்லாப் பாதைகளிலும் நேர்மையாக செயல்படக் கூடியவர்களும் மிகக் குறைவாகவே காணப்படுகிறார்கள். மேலும் பெரும்பாலானவர்கள் உலகச் செல்வங்கள் மீதே பற்று கொண்டவர்களாகவும் அதிலேயே தமது காலத்தை கழிக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்களே தவிர அவர்களில் யாரும் மரணத்தைப் பற்றிச் சிறிதும் நினைவில் கொள்வதில்லை. தொழுகையை கடைபிடிக்-காமலும் இறைவனை விட்டு கவனமில்லாதவர்களாகவும் இருக்கும் ஒவ்வொரு எஜமானன் மீதும் அவரது ஊழியர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும் அந்த எஜமானரின் பிடரியின் மீதே வந்து விழும். மேலும் மதுபானம் அருந்தும் ஒவ்வொரு எஜமானனின் கீழ் பணியாற்றும் ஊழியர்களும் அவருடன் மதுபானம் அருந்துவதில் பங்கு கொண்டவர்களாயின் அவர்களின் பாவமும் அந்த எஜமானனின் பிடரியின் மீதே விழும்.

அறிவாளிகளே! இவ்வுலகமானது நிலையான ஓர் இடம் அல்ல. ஆகவே நீங்கள் சுதாகரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லா விதமான அநீதிகளையும் விட்டு விடுங்கள். போதையை விளைவிக்கக் கூடிய ஒவ்வொரு பொருளையும் விட்டொழித்து விடுங்கள். மனிதனை நாசமாக்கக் கூடியது மது மாத்திரம் அல்ல. மேலும் எப்போது வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்ற, அபின், கஞ்சா, சரஸ், பங்கு, கள் முதலான போதை பொருட்களையும் நீங்கள் விட்டு விடுங்கள். அவை மூளையைக் கெடுத்து விடுவதுமல்லாமல் இறுதியில் மனிதனையே அழித்து விடுகிறது. ஆகவே இவற்றிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்பொருட்களை ஏன் உபயோகித்து வருகிறீர்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவற்றின் தீங்கினால் உங்களைப் போன்றவர்கள் போதை பொருள்களுக்கு அடிமையாகி ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கில் இவ்வுலகத்தை விட்டும் பிரிந்து கொண்டிருக்கிறார்கள். இதுபோக இத்தகையவர்களுக்கு மறுமையின் ஆக்கினை வேறு இருக்கிறது.

நீங்கள் நீண்ட வயதுடன் வாழவும் இறைவனுடைய அருட்கொடையை பெறவும் தூய்மையானவர்களாக மாறி விடுங்கள். வரம்பு மீறி சிற்றின்பத்தில் வாழ்க்கை நடத்துவது சாபத்திற்குரிய வாழ்க்கையாகும். வரம்பு மீறி தீய நடத்தையுடன் செயல்படுவதும் தான்தோன்றித்தனமாய் நடப்பதும் சாபத்திற்குரிய வாழ்க்கையாகும். வரம்பு மீறி இறைவனோடும் அல்லது அவனது அடியார்களோடும் நேசபாவமில்லாமல் அலட்சியமாக இருப்பதும் சாபக்கேடான வாழ்க்கையேயாகும். இறைவனுக்கும் மனிதர்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றி ஒரு யாசகரிடம் கேட்கப்படுவதுபோல் ஒவ்வொரு செல்வந்தனிடமும் இறைவனால் கேட்கப்படும். இன்னும் சொல்லப்போனால் அதை விட அதிகமாக கேட்கப்படும்.

இக்குறுகிய வாழ்க்கையை நம்பி இறைவனை விட்டும் முழுமையாக முகம் திருப்பக் கூடியவன் எத்தகைய துர்பாக்கியவனாயிருக்கிறான். அவன் இறைவனால் விலக்கப்பட்டவற்றை அவனுக்கு இறைவனால் ஆகுமான -தாக்கப்பட்டதுபோல் சிறிதும் அச்சமில்லாமல் உபயோகித்து வருகிறான். ஆவேசம் வரும்போது பைத்தியக்காரர்களைப் போல் பிறரைப் பழித்துரைக்கிறான். சிலரை அடித்துக் காயப்படுத்துகிறான். சிலரை கொலை செய்திடவும் ஆயத்தமாகிறான். தன் காமவெறியை நிறைவேற்ற வெட்கக் கேடான முறைகளின் எல்லையையே தாண்டி விடுகின்றான். ஆகவே அவன் உண்மையான சுகவாழ்வைப் பெறாமலேயே மரணமாவான்.

அன்புக்குரியவர்களே! நீங்கள் சில நாட்களுக்காக இவ்வுலகிற்கு வந்திருக்கிறீர்கள். அவற்றில் பெரும்பாலான நாட்கள் கடந்து விட்டன. ஆகவே நீங்கள் உங்களது எஜமானனை கோப்படுத்த வேண்டாம். உங்களை விட சக்திமிக்க ஓர் அரசுக்கு உங்களோடு பகை ஏற்பட்டால் அது உங்களை அழித்து விட முடியுமல்லவா? இவ்வாறிருக்க இறைவனின் வெறுப்பிலிருந்து உங்களால் எவ்வாறு தப்ப இயலும்? என்பதைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் இறைவனது பார்வையில் இறையச்சமுடையவர்களாக இருந்தால் உங்களை எவராலும் அழித்து விட முடியாது. இறைவனே உங்களை பாதுகாத்து வருவான். உங்களை கொலை செய்யும் பொருட்டு உங்களை பின் தொடரக் கூடியவனால் உங்களை எதுவும் செய்து விட முடியாது. இல்லாவிடில் இறைவனைத் தவிர உங்களது உயிரை பாதுகாக்கிறவன் வேறு யாருமில்லை; மேலும் நீங்கள் உங்களை பகைவர்களுக்குப் பயந்தும் அல்லது வேறு ஆபத்துக்களில் சிக்கியும் நிம்மதியிழந்தவர்களாக வாழ்வீர்கள். அது மட்டுமல்லாமல் உங்கள் வாழ்க்கையின் இறுதி நாள் பெரும் துக்கத்திலும் துயரத்திலுமே கழியும். எவர்கள் இறைவனோடு இருக்கிறார்களோ அவர்களுக்காகவே அவன் பாதுகாவலனாகி விடுகிறான். ஆகவே நீங்கள் இறைவன் பக்கம் வாருங்கள். அவனோடுள்ள ஒவ்வோர் எதிர்ப்பையும் விட்டு விடுங்கள். அவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் எவ்விதச் சோம்பலையும் காட்டாதீர்கள். அவனது படைப்பினங்களுக்கு நாவைக் கொண்டோ அல்லது கரங்களைக் கொண்டோ அநியாயம் செய்யாதீர்கள். மேலும் வானத்தின் கோபத்திற்கு தண்டனைக்கும் அஞ்சிக் கொள்ளுங்கள். இதுவே உங்களின் இரட்சிப்பிற்கான சரியான மார்க்கமாகும்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

கடந்த குத்பாவில் நோன்பு மற்றும் ரமலானின் நோக்கங்களை அல்லாஹ் விளக்கியுள்ளான் என்றும், அது உள்ளங்களில் தக்வாவை உருவாக்குவதே ஆகும் என்றும் கூறியிருந்தேன். இது தொடர்பாக நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை விளக்கியிருந்தேன். அதனைப் பெறுவதற்கு என்ன வழி? அதனை நாம் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும்? என்று கூறியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அதனை நமது உள்ளத்தில் அமர்த்துவதற்காக பல்வேறு இடங்களில் இதனை மேலும் விளக்கியுள்ளார்கள். மேலும் அதன் மூலம் நமது உள்ளத்தில் அதன் முக்கியத்துவம் நன்றாக ஊன்றுவதற்காக அன்னார் விளக்கினார்கள். நமது ஒவ்வொரு செயலிலும் நல்லொழுக்கத்திலும் அது வெளிப்படத் தொடங்குகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், ஒரு மனிதன் இறையச்சமுள்ளவனாக இருப்பதற்கு அவன் இறைவணக்கம் செய்பவனாக இருந்தால் மட்டும் போதாது. அல்லது அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றினால் மட்டும் போதாது. மாறாக, இறையச்சமுள்ளவர் என்பவரின் நல்லொழுக்கத்தின் தரமும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று விளக்கியவாறு அவர் தனது நல்லொழுக்கத்தின் மூலம் மற்றவரிடமும் நன்மை மற்றும் தக்வாவின் தாக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பல்வேறு கட்டளைகளின் ஒளியில் உயர்வான நல்லொழுக்கத்தைப் பேணி நடப்பதன் முக்கியத்துவத்தையும் இது தொடர்பாக அன்னார் செய்துள்ள முக்கியமான போதனைகளையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

இந்த நாட்களில் இந்த சோம்பலை அகற்றுவதற்கு அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். இந்த மாதத்தில் அதன்படி ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தை மேம்படுத்துவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவது, பலவீனங்கள் மற்றும் பாவங்களை அகற்றுவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

நல்லொழுக்கத்தைப் பெறுவதற்கு மிகவும் தூண்டக் கூடிய உதவக்கூடிய பொருள் தவ்பா ஆகும். உண்மையான தவ்பாவிற்கான மூன்று அடிப்படையான நிபந்தனைகள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

சிலர் வெளிப்படையான அற்புதங்களைப் பார்த்து ஈமான் கொள்கின்றனர். சிலர் உண்மைகள், இறை ஞானங்களைப் பார்த்து ஈமான் கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலார் எப்படி இருக்கிறார்கள் என்றால் உயர் நல்லொழுக்கமே அவர்களின் மன நிறைவுக்கு காரணமாக அமைகின்றது.எண்ணற்றவர் இப்போதும் கூட அஹ்மதிய்யத்தில் நுழைபவர்கள். ஏதாவது அஹ்மதிகளின் நல்லொழுக்கத்தின் தாக்கத்திற்கு ஆளாகி அல்லது ஒட்டுமொத்த அஹ்மதிகளின் நல்லொழுக்கத்தின் தாக்கத்திற்கு ஆளாகி அஹ்மதிகளாகின்றனர். ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நல்லொழுக்கம் என்பது அவரது தக்வாவை அதிகரிப்பதற்காக மட்டுமல்ல. மாறாக அது மார்க்கக் கடமையாகும். இன்னும் சொல்வதாயின், பிறரது சீர்திருத்தத்திற்கு காரணமானதும் ஆகும். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தமது நல்லொழுக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாம் நமது ஒவ்வொரு அமலின் மூலமாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பைஅத்தில் வந்ததன் மூலம் தூய மாற்றத்தை உருவாக்கியதை நிரூபித்துக் காட்ட வேண்டும். பிறகு மக்களுக்கு அதனைக் கூறவும் வேண்டும். இதுவே தப்லீகின் வழிமுறையாகும். அல்லாஹ் நம்மை தக்வாவின்படி நடந்து நமது நல்லொழுக்கத்தில் மாற்றத்தை உருவாக்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியை முன்னிறுத்தவும் எப்போதும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தவும் வாய்ப்பு தருவானாக. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப வாழ்வை கழிப்பவர் ஆவோமாக.

அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மியான் அதாவுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய லுதுஃபுர் ரஹ்மான் மஹ்மூது சாஹிப் அவர்களும், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா டாக்டர் மிர்ஸா முனவ்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய மிர்ஸா உமர் அஹ்மது சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**9 ஜுன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **9 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿٥٦﴾

கடந்த குத்பாவில் நோன்பு மற்றும் ரமலானின் நோக்கங்களை அல்லாஹ் விளக்கியுள்ளான் என்றும், அது உள்ளங்களில் தக்வாவை உருவாக்குவதே ஆகும் என்றும் கூறியிருந்தேன். இது தொடர்பாக நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை விளக்கியிருந்தேன். அதனைப் பெறுவதற்கு என்ன வழி? அதனை நாம் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும்? என்று கூறியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அதனை நமது உள்ளத்தில் அமர்த்துவதற்காக பல்வேறு இடங்களில் இதனை மேலும் விளக்கியுள்ளார்கள். மேலும் அதன் மூலம் நமது உள்ளத்தில் அதன் முக்கியத்துவம் நன்றாக ஊன்றுவதற்காக அன்னார் விளக்கினார்கள். நமது ஒவ்வொரு செயலிலும் நல்லொழுக்கத்திலும் அது வெளிப்படத் தொடங்குகிறது. தக்வா நம்மிடம் இல்லையென்றால், இறைவனின் திருப்தியைப் பெறத்தக்க எந்த நன்மையும் இருக்க முடியாது. தற்காலிக நன்மைகளை, தற்காலிக எழுச்சிகளினால் ஒருவர் செய்தாலும் அதில் உண்மையான தக்வா இருந்தால் மட்டுமே அந்த முறையாகப் பேணும் நிலை உருவாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், ஒரு மனிதன் இறையச்சமுள்ளவனாக இருப்பதற்கு அவன் இறைவணக்கம் செய்பவனாக இருந்தால் மட்டும் போதாது. அல்லது அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றினால் மட்டும் போதாது. மாறாக, இறையச்சமுள்ளவர் என்பவரின் நல்லொழுக்கத்தின் தரமும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று விளக்கியவாறு அவர் தனது நல்லொழுக்கத்தின்

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

### திருக்குர்ஆனிலிருந்து...

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

மூலம் மற்றவரிடமும் நன்மை மற்றும் தக்வாவின் தாக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

இந்த வகையில் அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ''நல்லொழுக்கம் ஒருவர் சாலிஹ் ஆக இருப்பதற்கான அடையாளமாகும்''. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) மேலும் ஒரு முஃமினின் நோக்கம் என்னவென்றால், இஸ்லாமிய போதனையின் அழகை எப்போதும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தக்வாவின் படி நடக்கும்போதுதான் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது சாத்திய –மாகும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தக்வாவிற்கு பல கிளைகள் உள்ளன. கர்வம், சுயநலம், விலக்கப்பட்ட பொருள்களிலிருந்து விலகியிருத்தல், தீய ஒழுக்கத்தை தவிர்த்தல் ஆகியவையும் தக்வாவே ஆகும். ஒருவர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்து –கிறார் எனில் அவரது எதிரியும் நண்பராகி விடுகிறார். இதனை இத்ஃபவு பில்லதி ஹிய அஹ்ஸன் என்று அல்லாஹ் கூறுகிறான். **(40:97)**

அவர்கள் கூறுகின்றார்கள்: தீமைகளிலிருந்து தப்பிப்பதும் ஒரு தக்வா ஆகும். நல்லொழுக்கத்தைப் வெளிப்படுத்துவதும் ஒரு தக்வா ஆகும். இதனால் பகைவன் கூட நண்பனாகி விடுகிறான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சிந்தனை செய்யுங்கள். இந்த வழிகாட்டல் என்ன போதனை செய்கிறது. இந்த வழிகாட்டலின் மூலம் இறைவனது விருப்பமாவது, எதிரிகள் உங்களை ஏசினாலும் அதற்கு நீங்கள் ஏச்சின் மூலமாக பதில் தரக்கூடாது என்பதாகும். மாறாக, அதன் மீது பொறுமை காட்ட வேண்டும். அதன் விளைவு என்னவாகும்? எதிரிகள் உங்கள் மேன்மையை உணர்ந்து தாமே வெட்கப்பட்டு போய்விடுவர். பழிவாங்கலின் மூலம் நீங்கள் என்ன தண்டனையை அவர்களுக்கு உங்களால் தர முடியுமோ அதனை விட இது சிறந்ததாகவே இருக்கும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இவ்வாறு ஒரு சாதாரண மனிதன் கொலை முயற்சி வரைதான் செல்ல முடியும். ஆனால் மனிதநேயத்தின் எதிர்பார்ப்பு மற்றும் தக்வா என்பது இதுவல்ல. நல்லொழுக்கம் எத்தகைய செல்வம் என்றால் ஒரு தீய மனிதரிடம் கூட அது அதன் தாக்கத்தை ஏற்பத்துகிறது.

ஒரு ஃபார்ஸி கவிதையில் கூறுகின்றார்கள். அதன் பொருள், கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். இதனால் உங்களை அறியாதவர் கூட உங்கள் வட்டத்திற்குள் வந்து விடுவார். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 81; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இதுவே அசல் விஷயமாகும். இதனை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். எப்போதும் நமது ஒவ்வொரு செயலையும் தக்வாவுக்குட்படுத்திய –வாறு நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் நல்லொழுக்கம் என்றால் என்ன? நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதன் நோக்கம் என்ன? நமக்கு முன் இந்த நல்லொழுக்கத்தின் முன்மாதிரி எது? என்று விளக்கியவாறு கூறுகிறார்கள்: முதலில் நல்லொழுக்கமே மனிதனை மனிதனாக்குகிறது. நல்லொழுக்கம் என்றால் வெறுமே மென்மையாக நடந்து கொள்ளுதல் என்று பொருளல்ல. மனிதனை மனிதனாக்குகிற நல்லொழுக்கம் என்பதன் பொருள் நீங்கள் மற்றவருடன் மென்மையாக நடந்து கொள்ளுங்கள் என்பது மட்டுமல்ல.

அவர்கள் கூறுகிறார்கள்: குல்க் மற்றும் கல்க் என்ற இரு சொற்கள் உள்ளன. அது ஒன்றுக்கொன்று தொடர்புள்ள பொருளை விளக்குகிறது. கல்க் என்பது வெளிப்படையான படைப்பைச் சுட்டிக் காட்டுகிறது. உதாரணமாக, காது, மூக்கு, முடி வரை அனைத்தும் வெளிப்படையான படைப்புகளில் அடங்கும். குல்க் என்பது மறைமுகமான படைப்பின் பெயராகும்.

அவ்வாறே மறைமுகமான ஆற்றல்கள் மனிதனையும், மனிதன் அல்லாதவற்றையும் வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றன. இவை அனைத்தும் குல்கில் அடங்கும். எந்த அளவுக்கு என்றால் சிந்தனை போன்ற எல்லா ஆற்றல்களும் குல்கில் அடங்கும்.

அவர்கள் கூறுகிறார்கள்: குல்க் –ஆல் மனிதன் தனது மனிதத் தன்மையை சீர்படுத்திக் கொள்கிறான். மனிதனது கடமைகள் இல்லையெனில் – நிர்ணயிக்கப்படவில்லை எனில், பிறகு இவன் மனிதனா? கழுதையா? என்று பார்க்க வேண்டியிருக்கும். குல்கில் குறைபாடு ஏற்படும் போது பிறகு வெறும் உருவமே மிஞ்சுகிறது. குல்க் நன்றாக இல்லையெனில் வித்தியாசம் இல்லையெனில் பிறகு மனிதனாவதற்கு உயர் நல்லொழுக்கம் தேவை. அதில் பங்கம் ஏற்பட்டால் பிறகு வெளிப்படையான மனித உருவம் மட்டுமே மிஞ்சும். அசல் மனிதத்தன்மை தீர்த்து போய் விடும்.

அன்னார் கூறுகிறார்கள்: உதாரணமாக அறிவு கெட்டுப்போய் விட்டால் பைத்தியம் என்றழைக்கப்படு –கின்றான். வெறும் வெளிப்படையான உருவத்தினால் மனிதன் என்றழைக்கப்படுகிறான். மனிதன் என்று வெளிப்படையான உருவத்தை வைத்து கூறப்படு –கிறான். அவன் பைத்தியமாக உள்ளான். சிறிதும் மனிதனிடம் இருக்க வேண்டிய அறிவு இல்லை. அதிலிருந்து விலகியுள்ளான்.

ஆக, நல்லொழுக்கம் என்பதன் பொருள் இறைவனது திருப்தியாகும். இறை திருப்தி என்பதன் பொருள் என்ன? அது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வாழ்வின் நடைமுறையின் பௌதீக வெளிப்பாடாகும். நல்லொழுக்கம் அதுவேயாகும். அதனை அல்லாஹ் விரும்புகிறான். அல்லாஹ் எதனை விரும்பினானோ அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்வில் தென்படுகிறது. அன்னாரின் நல்லொழுக்கம் ஒவ்வொரு கோணத்திலும் வெளிப்பட்டது. ஆகவே இறை திருப்தியைப் பெறுவது நமது நோக்கமாக இருக்க வேண்டும். நல்லொழுக்கம் என்பது இறைவனது திருப்தியைப் பெறும் வழிமுறை ஆகும். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வாழ்வின் செயல் முறைக்கேற்ப ஒருவர் தமது வாழ்வை அமைக்க முயற்சிக்க வேண்டும். இதுவே அடிப்படை நல்லொழுக்கம் ஆகும். இது ஆடிக் கொண்டிருந்தால் அதில் ஒரு கட்டடத்தை எழுப்ப இயலாது. நல்லொழுக்கம் என்பது ஒரு செங்கல்லின் மீது இன்னொரு செங்கல்லை வைப்பதாகும். ஒரு செங்கல் கோணலாகி விட்டால் முழு சுவரும் கோணலாகி விடும். ஒரு ஃபார்ஸி கவிதையில் ஒருவர் என்ன அழகாகக் கூறினார். அதன் பொருள், கட்டடம் எழுப்புவர் முதல் கல்லை கோணலாக வைத்தால் பிறகு உருவாகிற கட்டடம் வானம் வரை கோணலாகவே செல்லும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 136-137; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இதனை மிகவும் கவனத்துடன் கேட்க வேண்டும். பெரும்பாலான மக்களை நான் பார்த்துள்ளேன். கவனமாக ஆய்வு செய்துள்ளேன். சிலர் மிகவும் கொடை வள்ளலாக இருக்கிறார்கள். ஆனால் கூடவே மிகவும் கோபக்காரர்களாகவும் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள். உடனே கோபம் கொண்டு விடுகிறார்கள். சிலர் மென்மையானவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கருமிகளாக இருக்கிறார்கள். மிகவும் சகிப்புத் தன்மையும் மென்மையும் உடையவர்களாக இருந்தாலும் கருமித்தனம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சிலர் கோபத்தில் மக்களை கம்புகளாலும் தடிகளாலும் அடித்துக் காயப்படுத்தி விடுகின்றனர். ஆனால், பணிவு மென்மை போன்றவை பெயருக்குக் கூட அவர்களிடம் இருப்பதில்லை. சிலரைப் பார்க்கிறோம்; அவர்களிடம் பணிவு, மென்மை மிக அதிகமாக உள்ளது. ஆனால் வீரம் சுத்தமாக இருப்பதில்லை. கோபத்தில் இருப்பவரிடம் பணிவு அறவே இருப்பதில்லை. பணிவு, எளிமை காட்டுபவராக இருந்தால் வீரத்தைக் காட்ட வேண்டிய இடத்திலும் கூட அந்த குல்க் அங்கு முடிந்து போய் விடுகிறது.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கத்தைப் பற்றி அன்னார் கூறுகிறார்கள்: அல்லாஹ் அன்னாரின் பெருமையை குறித்து கூறுகிறான். இன்னக்க லஅலா குலுகின் அழீம். வாழ்வின் ஒவ்வொரு மைதானத்திலும் அவர்கள் நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை – இந்த நல்லொழுக்கத்திற்கு முன்மாதிரி அவர்கள்தான் என்பது போன்று நிலைநாட்டி விட்டார்கள். அதன்படி தமது சக்திக்கேற்ப நடப்பது ஒவ்வொரு முஃமினுக்கும் கடமையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறினார்கள். ஒரு காலத்தில் அன்னார் தமது சொற்பொழிவின் மூலம் பெரும் கூட்டத்தை தாக்கத்திற்கு உள்ளாக்கினார்கள். இன்னொரு காலம் வந்தது. அம்புகளையும் வாள்களையும் கொண்டு வீரத்தைக் காட்டினார்கள். வள்ளள் தன்மை என்று வரும்போது தங்கத்தின் ஒரு மலையைக் கூட வழங்கி விடுகிறார்கள். சகிப்புத் தன்மையில் தமது மகிமையைக் காட்டுவதனால் கொலை செய்யத்தக்க பணியையும் கூட விட்டு விட்டார்கள். சுருக்கமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான முன்மாதிரியாகும். அவ்வாறு அல்லாஹ் அவர்களை காட்டியுள்ளான்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்ப்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. ஷம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*எதற்கு தவ்ஹீது என்று பெயரோ, எது இரட்சிப்பிற்கு அடித்தளமாக இருக்கிறதோ அது காலத்தின் நபி அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அன்னாருக்கு கட்டுப்பட்டு நடக்காமல் கிடைக்க முடியாது. தூதருக்குக் கட்டுபடாமல் காய்ந்துபோன தவ்ஹீது மட்டும் எதற்கும் உதவாது. மாறாக, உயிரற்ற மரணித்தவர் போன்றே அது இருக்கும்.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உதாரணம் ஒரு பெரும் மரம் ஆகும். அதன் நிழலில் அமர்ந்து மனிதன் அதன் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். அதன் பழம், பூ, அதன் பட்டை, அதன் இலை இவை அனைத்தும் பயன்தரக் கூடியவையாகும்.

பிறகு அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கம் பற்றி கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் இருப்பவரே போர்க்களத்தில் மிகச்சிறந்த வீரராக கருதப்பட்டார். ஏனெனில் அன்னார்தான் போர்க் களத்தில் மிக அபாயகரமான இடத்தில் இருந்தார்கள். சுப்ஹானல்லாஹ்! என்ன மகிமை!!

அன்னார் கூறுகிறார்கள்: ஒரு காலம் வருகிறது. அவர்களிடம் எந்த அளவுக்கு ஆடுகள் இருந்தன என்றால் அந்த அளவு கைஸர், கிஸ்ராவிடம் கூட இருந்ததில்லை. அன்னார் அத்தனையையும் அதைக் கேட்ட ஒருவருக்கு கொடுத்து விட்டார்கள். இது அன்னாரின் குல்கின் வெளிப்பாடாகும். அவர்களிடம் இல்லையெனில் எவ்வாறு கொடுப்பார்கள்? அவர்களிடம் ஆட்சியின் கோணத்தைப் பார்ப்பதாயின் அன்னாரிடம் கொலை செய்யப்படத் தகுதியுள்ளவரை பழிவாங்கும் சக்தி இருந்தும் மன்னித்தார்கள்.

கடுமையிலும் கடுமையான துன்பங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிரிகள் தந்தனர். அத்தகைய எதிரிகள் அவர்களின் முன்வந்த போது லா தஸ்ரீப அலைக்குமுல் யவ்ம் – இன்றைய நாளில் நீங்கள் செய்த எந்த குற்றத்திற்கும் தண்டனை இல்லை என்று கூறி விட்டார்கள். இன்று நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள். இத்தகைய சந்தர்ப்பங்கள் வரவில்லை எனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உயர் நல்லொழுக்கம் எப்படி வெளிப்பட்டிருக்கும்?

அன்னார் கூறுகிறார்கள்: ''அன்னாரிடம் இல்லாத நல்லொழுக்கம் ஒன்றை கூறுங்கள். அன்னாரிடம் முழுமையாக இல்லாத நல்லொழுக்கம் ஒன்றை கூறுங்கள் பார்ப்போம்''. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 132; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதுவே அன்னாரின் முழுமையான முன்மாதிரியாகும். இந்த ரஸூலை உங்களால் முடிந்தவரை முழுமையாகப் பின்பற்றுங்கள். அந்த முன்மாதிரியைப் பின்பற்ற முயற்சியும் உழைப்பும் செய்ய வேண்டியுள்ளது. அந்த முன்மாதிரிப்படி நாம் எவ்வாறு நடக்க முடிக்கும் என்று கூறுவது போதுமானதல்ல. அல்லாஹ்வுடைய ரஸூலின் முன்மாதிரியோ மிக உயர் தரம் வாய்ந்தது. எனவே, நீங்கள் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான். அதனை நீங்கள் கடைபிடிக்குமாறும் கட்டளையிட்டுள்ளான். அதற்காக முயற்சியும் உழைப்பும் செய்வது அவசியமாகும்.

இந்த வகையில் இதனைப் பற்றி விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: எதுவரை மனிதன் முயற்சி செய்வதில்லையோ, துஆவை பயன்படுத்துவதில்லையோ அதுவரை உள்ளத்தில் படிந்துள்ள கறைகள் அகலுவதில்லை. கடுமை, இருள் போன்ற உள்ளத்தில் உருவான தடைகள் அகலுவதில்லை. முயற்சியும் துஆவும் அத்துடன் இணையாத வரை அகலுவதில்லை. முயற்சி துஆ இரண்டும் இதற்கு தேவையாகும். இந்த வகையில் அல்லாஹ் கூறுகிறான்: إِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِأَنْفُسِهِمْ அவர்கள் தங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளாத வரை அல்லாஹ் அவர்களுக்கு வந்த துன்பத்தை அகற்றுவதில்லை. தைரியமும், துணிவும் கொள்ளாத வரை அவற்றைப் பயன்படுத்தாமல் எப்படி மாற்றம் ஏற்படும்? **(13:12)**

அவர்கள் கூறுகிறார்கள்: ''இது அல்லாஹ்வின் மாறாத சுன்னத் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்: வலன் தஜித லிசுன்னதில்லாஹி தப்தீலா. ஆக, நமது ஜமாஅத்தாக இருக்கட்டும் அல்லது வேறு யாராகவும் இருக்கட்டும். நல்லொழுக்க மாற்றத்தைச் செய்வது என்பது முயற்சியும் துஆவும் இல்லாமல் சாத்தியமில்லை''. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 137; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மனிதனின் நல்லொழுக்கம் எவ்வளவுதான் வீழ்ந்து கிடந்தாலும் சீர்திருத்தம் செய்ய அவன் விரும்பினால் சீர்திருந்த முடியும் என்பதை விளக்குகிறார்கள். அதற்காக முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும். அன்னார் இது குறித்து அறிஞர்களின் நிலைப்பாட்டைப் பற்றியும் கணிசமாக குறிப்பிட்டுள்ளார்கள். இதற்காக ஓர் உதாரணம் கூறியுள்ளார்கள்.

அறிஞர்களிடம் நல்லொழுக்கத்தின் மாற்றத்திற்கும் இரு வழிகள் உள்ளன. மனிதன் நல்லொழுக்கத்தை மாற்றிக் கொள்வதற்கு சக்தி படைத்தவன் என்று அவர்களில் ஒரு சாரார் கருதுகிறார்கள். இன்னொரு வகையினர் அதற்கு மனிதனுக்கு சக்தியில்லை என்று நம்புகிறார்கள். அசல் விஷயம் என்னவென்றால், அசட்டையும் சோம்பலும் இல்லையெனில் கையையும் காலையும் அசைத்தால் மாற்றம் ஏற்பட முடியும். சோம்பல் காட்டாதீர்கள். முயற்சி செய்யுங்கள். நல்லொழுக்கம் சிறந்ததாக முடியும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த இடத்தில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. யுனானிகளின் பிரபல தத்துவஞானி அஃப்லாதூன் இடம் ஒரு மனிதர் வந்தார். வாசலில் நின்று கொண்டு தாம் வந்தள்ளதாக உள்ளே தகவல் அனுப்பினார். அஃப்லாதூனின் வழக்கம் என்னவாக இருந்தது என்றால் வந்தவரின் முகத்தின் தோற்றம் அழகு குறைபாடுகளை அறியாதவரை அவரது முகத்தைப் பற்றி தெரியாதவரை உள்ளே வர விடுவதில்லை. அவரது உருவம் அவரது வெளிப்படையான நிலைகள் தெரியாமல் உள்ளே விடுவதில்லை. அந்த மனிதர் எத்தகையவர் என்று அதன் மூலம் கணித்து விடுவார். பணியாள் வந்து அவரது தோற்றத்தைக் கூறியதும், அஃப்லாதூன், வந்தவரிடம் கூறுங்கள். உம்மிடம் தீய ஒழுக்கங்கள் பல உள்ளன. எனவே உம்மை நான் சந்திக்க விரும்பவில்லை என்று கூறினார். அம்மனிதர் அஃப்லாதூனின் பதிலைக் கேட்டு பணியாளிடம், அஃப்லாதூன் என்ன கூறினாரோ அது சரிதான். ஆனால் நான் எனது தீய ஒழுக்கங்களை அழித்து என்னை சீர்திருத்திக் கொண்டேன் என்று கூறினார். உடனே அஃப்லாதூன், ஆம். அது நடக்கக் கூடிய காரியம்தான் என்று கூறினார். அவரை உள்ளே அழைத்தார். மிகவும் கண்ணியத்துடனும் மரியாதை –யுடனும் அவரை சந்தித்தார்.

அன்னார் கூறுகிறார்கள்: ''தீய ஒழுக்கங்களை சீர்திருத்த முடியாது என்று கருதுகிற அறிஞர்கள் தவற்றில் இருக்கிறார்கள். நாம் பார்க்கிறோம். உத்தியோகம் பார்க்கின்ற சிலர் லஞ்சம் வாங்குகிறார்கள். அவர்கள் உண்மையான தவ்பா செய்வார்கள் எனில் அதற்குப் பிறகு அவர்களுக்கு தங்கத்தின் ஒரு மலையைக் கொடுத்தாலும் அதனை அவர்கள் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை''. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 137-138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அன்னார் நல்லொழுக்கத்தை சரிசெய்வது சம்பந்தமாக ஓர் உதாரணம் தந்தவாறு கூறுகிறார்கள்: ''மனிதன் மீது ஒருபுறம் பலவீனம் உருவாகிறது. அவனது வெளிப்படையான அமைப்பின் மீது இயலாமை உருவாகிறது. இது வயோதிகம் என்று கூறப்படுகிறது. அந்நிலையில் அவனது கண்கள் தமது பணியை விட்டு விடுகின்றன. காது கேட்க முடிவதில்லை. சுருக்கமாக உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் தமது பணியிலிருந்து விலகி கைவிடத்தக்க நிலைக்கு வந்து விடுகிறது. அதுபோன்றே வயோதிகமும் இரு வகைப்படும். ஒன்று இயலாமை. மற்றொன்று இயல்புக்கு மாற்றமானது. இயல்பான வயோதிகம் பற்றி மேலே கூறப்பட்டது. அது வெளிப்படையான உடலின் வயோதிகம் ஆகும். இயல்புக்கு மாற்றமானது என்பது செயலிழக்கச் செய்யும் நோயைப் பற்றி கவலைப்படாமல் இருத்தல். அது மனிதனை பலவீனப்படுத்தி காலத்திற்கு முன்பே அது பற்றி கவலைப்படாவிட்டால் அவனை வயோதிகன் ஆக்கி விடக் கூடியது. இவ்வாறு மனித பௌதீக உடலில் இருவகை வயோதிகம் உள்ளது. இயற்கை அல்லாமல் சில நோயின் காரணமாக வருகிறது. அது எச்சரிக்கையாக இல்லாததன் விளைவாக வருகிறது.

இவ்வாறே மனிதனின் உட்புற நிலைகளிலும் ஏற்படுகிறது. வெளிப்படையான அமைப்பில் இருவகை முதுமை இருப்பது போன்று உட்புற ஆன்மீக அமைப்பிலும் இருவகை முதுமைகள் உள்ளன. ஒருவர் தமது தீயொழுக்கங்களை உயர் நல்லொழுக்கமாக மாற்றி நல்ல எண்ணங்களாக மாற்றவில்லை என்றால் அவரது நல்லொழுக்க நிலை முற்றிலும் வீழ்ந்து விடுகிறது.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலிலிருந்து இந்த விஷயம் மிகத் தெளிவாக நிரூபணமாகி விட்டது. ஒவ்வொரு நோயிற்கும் மருந்து உள்ளது. ஆனால் சோம்பலும் அசட்டையும் மனிதனிடம் மிகைத்து விட்டால் அவர் அழிவதைத் தவிர வேறு எதனை விரும்புகிறார்? ஒரு வயோதிகரைப் போன்று எதுவும் தேவையில்லை என்று ஒருவர்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)*

**முஹம்மது ஹுஸைன்**

பழனி



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்.*

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.



**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**

மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

இருந்து விட்டால் எப்படி தப்பிக்க முடியும்?" (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 136-137; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இந்த நாட்களில் இந்த சோம்பலை அகற்றுவதற்கு அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். இந்த மாதத்தில் அதன்படி ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தை மேம்படுத்து –வதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவது, பலவீனங்கள் மற்றும் பாவங்களை அகற்றுவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட சூழல் இருந்தும் ஒருவர் கவனம் செலுத்தவில்லை என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியதுபோன்று சூழ்நிலைகள் இருந்தும் கூட மனிதன் வயோதிகத்தின் பக்கம் சென்று விடுவான். அதில் வாழ்வுக்கு முடிவு உள்ளது. பிறகு மனிதன் தக்வாவை பெறாமலேயே இறைவன் முன் வந்து நிற்கிறான்.

பிறகு நல்லொழுக்கத்தைப் பெறுவதற்காக தவ்பாவின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்: தவ்பா என்பது உண்மையில் நல்லொழுக்கத்தைப் பெறுவதற்கு மிகவும் தூண்டக்கூடிய உதவுகின்ற பொருள் ஆகும். நல்லொழுக்கத்தைப் பெறுவதாக இருப்பினும் அதுவும் தவ்பாவின் மூலமே பெற முடியும். தவ்பா என்பது பாவத்திலிருந்து மன்னிப்புக் கேட்டு விட்டோம் என்பது மட்டுமல்ல. மாறாக, உயர் நல்லொழுக்கத்தில் நடப்பதும் அதனைப் பெறுவதும் ஆகும். அதற்காக தவ்பா மிகவும் அவசியமாகும். அது மனிதனை முழுமையாக்குகிறது. அதாவது எந்த மனிதர் நல்லொழுக்க மாற்றத்தை விரும்புகிறாரோ அவர் உண்மையான உள்ளத்துடனும் உறுதியான எண்ணத்துடனும் தவ்பா செய்ய வேண்டும்.

இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். தவ்பாவுக்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. அது அல்லாமல் தவ்பதுன் நஸூஹ் என்ற உண்மையான தவ்பா கிடைக்காது. இந்த மூன்று நிபந்தனைகளுள் முதலாவது நிபந்தனையை அரபி மொழியில் இக்லாஃ என்று கூறுகிறார்கள். அதாவது மறுக்கத்தக்க செயல்களைத் தூண்டும் இந்த கிளர்ச்சியூட்டும் ஒழுக்கங்களை அகற்றுவதாகும். மறுக்கத்தக்க பழக்கங்கள், வீணான எண்ணங்கள், தீய ஒழுக்கங்கள் ஆகியவற்றை அகற்றுவது முதல் நிபந்தனையாகும். முதல் நிபந்தனை எப்படிப்பட்டது? கற்பனைகள் இதில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனை எவ்வாறு அகற்றுவது என்பதை விளக்குகிறார்கள்.

மனிதன் ஏதாவது ஒன்றை கற்பனை செய்கிறான் என்றால் அவனது இயல்பில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனிதனின் செயலில் வெளிப்படுவதற்கு முன் ஒவ்வொரு செயலும் ஒரு கற்பனையைக் கொண்டிருக்கிறது. எந்தவொரு அமலும் ஒரு எண்ணத்தை கற்பனையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே தவ்பாவுக்காக முதல் நிபந்தனை இந்த கிளர்ச்சி அளிக்கும் எண்ணங்களை விட்டு விடுவதாகும். உதாரணமாக, ஒரு மனிதன் ஒரு பெண்ணிடம் தகாத உறவு வைத்துள்ளார் எனில் அதிலிருந்து தவ்பா செய்வதற்கு முதலில் அவளது உருவத்தை ஒரு மோசமான உருவமாகக் கருத வேண்டும். எல்லா தவறான தீய எண்ணங்களையும் உள்ளத்தை விட்டு அகற்ற வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று கற்பனையின் தாக்கம் வலுவான தாக்கமாகும். நான் சூஃபிகளின் தஸ்கிராவில் படித்துள்ளேன். அவர்கள் கற்பனையை எந்த அளவுக்கு கொண்டு சென்றார்கள் எனில் மனிதனை பன்றி அல்லது குரங்கின் வடிவத்தில் பார்த்தனர். காரணம் என்னவென்றால், எப்படி மனிதன் கற்பனை செய்கிறானோ அப்படியே அதன் சாயல் வந்து விடுகிறது. ஆகவே எந்த எண்ணங்கள் தீய ரசனைக்கு காரணமாக கருதப்படுகிறதோ அதனை அழிப்பது முதல் நிபந்தனையாகும். கற்பனையில் அதனை அசுத்தமானதாகக் கருத வேண்டும். இரண்டாவது நிபந்தனை வெட்கம்; வெட்கத்தை வெளிப்படுத்துவது. ஒவ்வொரு மனிதனின் மனதிலும் ஓர் ஆற்றல் உள்ளது. அது ஒவ்வொரு தீமையின்போதும் எச்சரிக்கை செய்கிறது. ஆனால் பேறிழந்த மனிதன் அதனை கைவிடப்பட்டதாக விட்டு விடுகிறான். அல்லாஹ் அவனுக்குள் வைத்துள்ள அந்த திறமையை பயன்படுத்துவதில்லை. பாவத் தூண்டுதலில் மனிதன் வெட்கத்தை வெளிப்படுத்தினால், இந்த ரசனைகள் தற்காலிகமானவை; சில நாட்களுக்குரியவை என்று கருதினால், பிறகு ஒவ்வொரு முறையும் இந்த ரசனையில் ஒரு குறைவு ஏற்பட்டுக் கொண்டே

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.*

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

செல்லும். வயோதிகம் அதிகமாகி சக்திகள் பலவீனப்பட்டு விட்ட பிறகு இந்த உலகியல் ரசனைகளை விட்டு விடவே வேண்டியதுள்ளது. எனவே மனிதன் இந்த ரசனைகள் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே தன்னாலேயே நம்மை விட்டுப் போய் விடும் என்றால் பிறகு அதனை செய்ய முற்பட்டு என்ன பெறப் போகிறோம்?

அவர்கள் கூறுகிறார்கள்: அத்தகைய மனிதன் நற்பேறு பெற்றவன். அவன் தவ்பாவின் பக்கம் திரும்பியவன். அவனிடம் முதலில் இக்லா –வின் எண்ணம் உருவாக வேண்டும். அதன் மூலம் அவன் தவறான எண்ணங்களை கற்பனைகளை அகற்றி விட வேண்டும். இந்த அசுத்தங்கள் அகன்று போனால், பிறகு தாம் செய்த தவறுக்காக வெட்கம் கொள்ள வேண்டும். பிறகு மூன்றாவது நிபந்தனை உறுதி. வருங்காலம் குறித்து உறுதியான எண்ணம் கொள்வது. இனிமேல் இந்த தீமையின் பக்கம் தாம் ஒருபோதும் திரும்பப் போவதில்லை என்று உறுதியான எண்ணம் கொள்ளுதல் ஆகும். ஆகவே அவன் இவ்வாறு உறுதி கொள்ளும் போது இறைவன் அவருக்கு உண்மையான தவ்பா செய்வதற்கு வாய்ப்பளிக்கிறான். எந்த அளவுக்கு என்றால் தீமை கண்டிப்பாக அவனிடமிருந்து அழிந்து அழகிய நல்லொழுக்கங்களும் புகழுக்குரிய செயல்களும் அவரிடம் வந்து விடும். இது நல்லொழுக்கத்தின் மீது வெற்றியாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இதன் மீது ஆற்றலை –யும் சக்தியையும் வழங்குவது அல்லாஹ்வின் பணியாகும். ஏனெனில் அவனே எல்லா சக்தி–களுக்கும் ஆற்றல்களுக்கும் உரிமையாளன் ஆவான்.

அல்லாஹ் கூறியது போன்று அதாவது இன்னல் குவ்வத்த லில்லாஹி ஜமீஆ. எல்லா ஆற்றல்களும் அல்லாஹ்வுக்கே உரியவை. மனிதன் பலவீனத்தை அடிப்படையாகக் கொண்டவன். குலிகல் இன்ஸானு ளயீஃபா என்பதே அவனது உண்மை நிலையாகும். ஆகவே இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெறுவதற்கு மேற்கொண்ட இந்த மூன்று நிபந்தனைகளையும் அமல் செய்தவாறு அசட்டை –யையும் சோம்பலையும் கை விட வேண்டும். எப்போதும் முயற்சி செய்தவாறு துஆ செய்ய வேண்டும். அப்போது அல்லாஹ் அவரது நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவான். (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 138-140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு இத்தீயொழுக்கங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்பவருக்கு ஒரு வீரரின் உதாரணம் தந்தவாறு அன்னார் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத்தில் வீரர்கள் உருவாக வேண்டும் என்பது நமது எதிர்பார்ப்பு அல்ல. நமக்கு பயில்வான்கள் வேண்டியதில்லை. நமக்கு எத்தகைய ஆற்றல் உள்ளவர்கள் வேண்டும் எனில் அவர்கள் நல்லொழுக்க மாற்றத்திற்காக முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். ஒரு மலையை அதன் இடத்திலிருந்து அகற்றுபவர் ஆற்றல் உள்ளவர் அல்லர். அசல் ஆற்றல் உள்ளவர் எவரெனில், உயர் நல்லொழுக்கம் பெற சக்தி படைத்தவர்தான் அசல் ஆற்றல் உள்ளவராவார்.

ஆகவே, நினைவில் கொள்ளுங்கள். உங்கள் முழு தைரியத்தையும் ஒழுக்க நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக செலவு செய்வீர்கள் என்றால் அதுவே உண்மையான தைரியம் ஆகும். (மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 138-140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: உயர் நல்லொழுக்கம் எத்தகைய அற்புதம் எனில் அதன் மீது எவரும் விரல் வைக்க முடியாது. இதன் காரணத்தால்தான் நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எல்லாரையும் விட பெரிய நல்லொழுக்க அரியணை கிடைத்தது. அல்லாஹ் கூறியிருப்பதைப் போன்று (68:5) إِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ இங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுடைய ஒவ்வோர் அற்புதத்திலும், எல்லா நபிமார்களை விட நல்லொழுக்கத்திலும் கூட அவர்களே பெரியவர்களாக இருக்கின்றார்கள். அன்னாரின் நல்லொழுக்க அற்புதமே முதலிடத்தில் உள்ளது. இதனைப் போன்ற ஓர் உதாரணத்தை உலக வரலாறு கூற முடியாது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

அன்னார் கூறுகிறார்கள்: நான் கருதுகிறேன். தமது தீயொழுக்கங்களை விட்டு விட்டு தீய வழக்கங்களை விட்டு விட்டு அழகிய நல்லொழுக்கங்களை எடுத்துக் கொண்டார் எனில் அவருக்கு அதுவே அற்புதம் ஆகும். உதாரணமாக மிகவும் கடின இயல்புள்ள மனிதர், கோபக்காரர் அந்த தீய வழக்கத்தை விட்டு விடுகிறார்; மென்மையையும் மன்னிப்பையும் கடைபிடிக்கிறார்; கருமித்தனத்தை விட்டு விட்டு வள்ளல் தன்மையை மேற்கொள்கிறார்; பொறாமைக்குப் பதில் அனுதாபத்தை மேற்கொள்–கிறார் எனில் சந்தேகமின்றி அதுவே அற்புதம் ஆகும். உங்களில் எவர்தான் அற்புதத்தை நிகழ்த்துபவராக விரும்ப மாட்டார்? ஒவ்வொருவரும் விரும்புவார் என்பதை நான் அறிகிறேன். ஆகவே இது ஓர் அற்புதம் மற்றும் உயிருள்ள அற்புதம் ஆகும். மனிதன் நல்லொழுக்க நிலையை சரி செய்ய வேண்டும். ஏனெனில் இதன் தாக்கம் ஒருபோதும் வீணாகாது. மாறாக அதன் பலன் வெகு தூரம் செல்கிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவர், படைப்பு மற்றும் படைப்பாளன் இருவரின் பார்வையிலும் அற்புதங்களை உடையவராக ஆகி விட வேண்டும். தூய மாற்றத்தை உருவாக்கியவாறு, எளிமையை உருவாக்கியவாறு தன்னலத்தை விட்டு விட்டு வள்ளல் தன்மையின் வழக்கத்தை ஏற்படுத்தியவாறு, பொறாமையின் பழக்கத்தை விட்டவாறு அனுதாபத்தின் வழக்கத்தை ஏற்படுத்தியவாறு இதுபோன்ற சிறப்புகளை மேற்கொண்டு தீமைகளை விட்டு விடுபவர் அல்லாஹ்விடத்திலும் படைப்புகளிடத்திலும் அற்புதம் உடையவர் ஆகிறார்.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலான தீய மக்கள் எந்த அசாதாரணமான அற்புதங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவர்களது நல்லொழுக்க நிலையைப் பார்த்து தலையை குனிந்தார்கள் என்று பார்க்கிறோம். அவர்களுக்கு ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழி எதுவும் கிடைக்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலான மக்களின் வாழ்க்கை வரலாற்றில் இதனை நீங்கள் பார்ப்பீர்கள். அவர்கள் இந்த நல்லொழுக்க அற்புதங்களைப் பார்த்துதான் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 141-142; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் இந்த விஷயங்களை எந்த சபையிலிருந்து கூறிக் கொண்டிருந்தார்களோ, அங்கு சில சீக்கியர்கள் பக்கீர்மார்களின் உடையணிந்தவர்–களாக வந்தனர். அதிக போதையிலும் இருந்தார்கள். அவர்கள் எத்தகைய அசுத்தமான வார்த்தைகளில் உளறினார்கள் என்றால் அந்த சொர்க்கத்தின் சபையை அசுத்தமாக்கி விடக்கூடிய வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தினர். அதனை நிம்மதியின்மையை உருவாக்குவதற்காக செய்தனர். ஆனால் நம்முடைய உண்மையான இமாம் (அலை) அவர்கள் தமது செயல் முன்மாதிரியின் மூலம், தாம் வழிகாட்டிய அந்த உயர்ந்த நல்லொழுக்க அற்புதத்தைக் காட்டினார்கள். அதன் தாக்கம் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டது என்றால் அங்கிருந்த பலர் அதனைப் பார்த்து தேம்பி தேம்பி அழுது விட்டனர். பிறகு அந்த விஷமிகளை போலீஸ் வந்து பிடித்துச் சென்றது. போலீஸிடம் கிடைத்த அடியினால் போதையிலிருந்து அவர்கள் வெளி வந்தனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 142; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஈமான் கொள்வதில் பல்வேறு காரணங்களைப் பற்றி கூறினார்கள்: கட்டுப்படாத மனிதர்கள் நபிமார்களுக்கு எதிராக நின்றார்கள். குறிப்பாக நமது நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு எதிராக நின்றார்கள். ஈமான் கொண்டது அற்புதம் மட்டுமல்ல. அந்த அற்புதம் அவர்களின் மன நிறைவுக்குக் காரணமாக இருந்தது மட்டுமல்ல. மாறாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்த உயர் நல்லொழுக்கத்தை மட்டுமே பார்த்து அன்னாரின் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டனர். வல்லமையின் அற்புதங்கள் செய்ய முடியாத பணியை நல்லொழுக்கத்தின் அற்புதங்கள் செய்ய முடியும்.

அல் இஸ்திகாமத்து ஃபவகல் கராமத் என்பதன் கருத்து இதுவேயாகும். நிலைத்து நிற்றல் எத்தகைய அற்புதம் காட்டுகிறது என்பதை அனுபவித்துப் பாருங்கள். மற்ற விஷயங்கள் செய்யப்படும்போது மக்கள் குறிப்பாக இக்காலத்தில் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் இன்ன மனிதர் நல்லொழுக்கம் உடையவர் என்று தெரிந்து விட்டால் அவரிடம் எந்த அளவுக்கு மக்கள் கூடுகிறார்கள் என்றால் அது ஒன்றும் மறைவான விஷயமல்ல.

அவர்கள் கூறுகிறார்கள்: “புகழுக்குரிய நல்லொழுக்கத்தின் கண்ணியம், பலவகையான அடையாளங்களைப் பார்த்தும் மனநிறைவும் ஆறுதலும் அடையாதவர் மீதும் கூட படுகிறது. விஷயம் என்னவெனில் சிலர் வெளிப்படையான அற்புதங்களைப் பார்த்து ஈமான் கொள்கின்றனர். சிலர் உண்மைகள், இறை ஞானங்களைப் பார்த்து ஈமான் கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலார் எப்படி இருக்கிறார்கள் என்றால் உயர் நல்லொழுக்கமே அவர்களின் மன நிறைவுக்கு காரணமாக அமைகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 81-82; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எண்ணற்றவர் இப்போதும் கூட அஹ்மதிய்யத்தில் நுழைபவர்கள் ஏதாவது அஹ்மதிகளின் நல்லொழுக்கத்தின் தாக்கத்திற்கு ஆளாகி அல்லது ஒட்டுமொத்த அஹ்மதிகளின் நல்லொழுக்கத்தின் தாக்கத்திற்கு ஆளாகி அஹ்மதிகளாகின்றனர். ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நல்லொழுக்கம் என்பது அவரது தக்வாவை அதிகரிப்பதற்காக மட்டுமல்ல. மாறாக அது மார்க்கக் கடமையாகும். இன்னும் சொல்வதாயின், பிறரது சீர்திருத்தத்திற்கு காரணமானதும் ஆகும். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தமது நல்லொழுக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ஈமானின் வழிமுறை என்ன?

இதனை தெளிவுபடுத்தியவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்விடம் சீர்திருத்தம் வேண்டுவது ஆற்றல்களைச் செலவழிப்பது இதுவே ஈமானிய நடைமுறையாகும். தமது ஆற்றல்கள் அனைத்தையும் செலவழித்தல் மற்றும் சீர்திருத்தத்திற்காக துஆ செய்தல் ஆகியவை ஈமானைப் பெறுவதற்கான வழிமுறையாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹதீஸில் வருகிறது. ஒருவர் நிச்சய உறுதியுடன் தமது கையை துஆ செய்வதற்காக உயர்த்துகிறார் என்றால் அல்லாஹ் அவரது துஆவை மறுப்பதில்லை. ஆகவே இறைவனிடம் கேளுங்கள். அதுவும் நிச்சய உறுதி மற்றும் உண்மையான நிய்யத்துடன் கேளுங்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது போதனை மீண்டும் இதுவேயாகும். நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதே தமது அற்புதத்தை வெளிப்–படுத்துவதாகும். நான் அற்புதத்தை காட்டுபவராக ஆக விரும்பவில்லை என்று ஒருவர் கூறுவார் எனில் அவரை ஷைத்தான் தடுமாற வைத்துள்ளான் என்று நினைவில் கொள்ளுங்கள். கராமத் என்றால் தன்னையே பார்த்து பெருமைப்பட்டுக் கொள்தல் என்று பொருளல்ல. கராமத் என்றால் அதன் மூலம் மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையும் தத்துவமும் தெரிய வருவதாகும். வழிகாட்டல் ஆகும். நான் மீண்டும் கூறுகிறேன். ஒருவர் தன்னைப் பார்த்து பெருமைப்பட்டுக் கொள்வது நல்லொழுக்கத்தைச் சார்ந்த விஷயமே அல்ல. மாறாக இது ஷைத்தானிய ஊசலாட்டமாகும். கோடிக்கணக்கான முஸ்லிம்கள் பூமியில் பல்வேறு பகுதிகளில் தென்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் வாளின் ஆதிக்கத்தால் ஒப்புக் கொள்ள வைக்கப்பட்டவர்களா? இது முற்றிலும் தவறாகும். இது இஸ்லாத்தின் அற்புதத்தின் தாக்கமாகும். அதுவே அவர்களை ஈர்த்து வந்தது.

அவர்கள் கூறுகிறார்கள்: அற்புதங்கள் பல வகைப்பட்டவையாகும். அவற்றில் ஒன்று நல்லொழுக்க அற்புதங்கள் ஆகும். ஒவ்வொரு களத்திலும் அதற்கு வெற்றி கிடைக்கிறது. முஸ்லிம் ஆனவர்கள் அனைவரும் நம்பிக்கை கொண்டவர்களின் நல்லொழுக்க அற்புதங்களையே பார்த்தனர். அதன் தாக்கம் ஏற்பட்டது. அவர்கள் இஸ்லாத்தை கண்ணியமான பார்வையால் பார்த்தனர். வாளைப் பார்க்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும் பெரும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது. அதாவது இஸ்லாத்தின் உண்மையின் உயிர் எத்துணை வலியது என்றால் அதுவே அன்னிய சமுதாயங்களை இஸ்லாத்திற்கு வரும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கியது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 145-146; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

மேலும் நல்லொழுக்கமும் ஓர் உணவு போன்றது. நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதும் கூட அல்லாஹ்வால் தரப்பட்டவற்றை செலவு செய்வது போன்றதாகும். அதுவுமே தக்வாவின் ஒரு செயற்பிரிவு ஆகும் என்று விளக்கியவாறு கூறுகிறார்கள்: பொதுமக்கள் பொதுவாக ரிஸ்க் என்றால்


**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்.

**மர்ஹூம் ஷேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

வெளிப்படையான உணவு என்று கருதுகின்றனர். அது தவறாகும். உண்ணுதல் குடித்தலுக்கான பொருள், பணம் ஆகியவை மட்டும் ரிஸ்க் அல்ல. எந்த ஆற்றல்கள் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் ரிஸ்க் ஆகும். அறிவுகள் திறமைகள் பௌதீக வருமானம் பொருளின் விரிவு அனைத்தும் ரிஸ்க் ஆகும். மனிதனுடைய திறமைகள் நல்லொழுக்கம் அவனது பொருள் ஆகிய அனைத்தும் ரிஸ்க் ஆகும். ஆட்சியும் ரிஸ்கில் அடங்கும். உயர் நல்லொழுக்கமும் ரிஸ்கிலேயே அடங்கும்.

அல்லாஹ் கூறுகிறான்: நாம் வழங்கியதிலிருந்து செலவு செய்கிறார்கள். அதாவது அவன் வழங்கிய உணவிலிருந்து உணவைத் தருகிறார்கள். அறிவிலிருந்து அறிவையும் நல்லொழுக்கத்திலிருந்து நல்லொழுக்கத்தையும் வழங்குகிறார்கள். அறிவை வழங்குவது வெளிப்படையானது. நினைவில் கொள்ளுங்கள். தமது பொருளிலிருந்து தேவை உடையவருக்கு வழங்காதவர் மட்டும் கருமியல்ல. மாறாக ஒருவருக்கு அல்லாஹ் கல்வியை தந்தும் அவர் அதனை மற்றவருக்கு கற்பிக்காமல் இருந்தால் அவரும் கருமியேயாவார். கருமிகளில் பல வகையினர் உண்டு. எந்த வகையிலாவது தமது பொருளை மறைத்து வைப்பவரும் கருமியாவார்.

அவர்கள் கூறுகிறார்கள்: எவராவது தமது திறமையை தொழிலை பிறருக்கு கற்றுக் கொடுத்து விட்டால் அவர் அதனை கற்ற பிறகு நமக்கு மதிப்பு இருக்காது என்ற எண்ணத்தில் ஒரு கல்வியைக் கற்றுத் தரா விட்டால் தமது வருமானம் குறைந்து விடும் என்று கருதினால் அது ஷிர்க் ஆகும். ஏனெனில் இந்நிலையில் அவர் தனது திறமையை மட்டுமே தன்னுடைய ரிஸ்க் (உணவளிப்பவர்) ஆகக் கருதுகிறார். இதேபோன்று எவர் நல்லொழுக்கத்தைப் பயன்படுத்தவில்லையோ அவரும் கருமியாவார். உயர் நல்லொழுக்கத்தை தருவது என்றால் அல்லாஹ் தனது அருளினால் மட்டுமே உங்களுக்கு தந்துள்ள நல்லொழுக்கத்தை அவனது படைப்புகளிடம் பயன்படுத்த வேண்டும். அல்லாஹ் மனிதனுக்காக தந்த நல்லொழுக்கங்களை மனிதன் முதலில் பெற வேண்டும். பிறகு அதனை மனிதருக்கு முன் வெளிப்படுத்த வேண்டும். இதுவே இறைவன் தந்த ரிஸ்கில் இருந்து தருவதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இவரது முன்மாதிரியை பார்ப்பவர்களும் தாமும் அந்த நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டும் என்று விரும்புவர். மனிதன் தான் இந்த உயர் நல்லொழுக்கத்தைக் காட்டும்போது மக்களும் நல்லொழுக்கம் காட்ட முயற்சி செய்வர். உயர் நல்லொழுக்கம் என்பது மென்மையான முறையில் பேசுவது மட்டுமல்ல. மாறாக, வீரம், தயாளம், மன்னிப்பு என எந்த அளவுக்கு மனிதனுக்கு ஆற்றல்கள் வழங்கப்பட்டுள்ளனவோ இவை அனைத்தும் நல்லொழுக்க ஆற்றல்களே ஆகும். அவற்றை அதற்குரிய இடத்தில் பயன்படுத்துவதும் நல்லொழுக்க நிலையில் அடங்கும். (மல்.∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 435-436; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நமது ஜமாஅத்திற்கு நல்லொழுக்கத்தை காட்டுவது மற்றும் தமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக போதனை செய்தவாறு கூறுகிறார்கள்: எவர் தமது அண்டை அயலாரிடம் தமது மாற்றத்தைக் காட்டுகிறாரோ முதலில் எப்படி இருந்தார் என்றும் இப்போது எப்படி இருக்கிறார் என்றும் மாற்றத்தைக் காட்டுகிறாரோ அவர் ஒரு அற்புதத்தைக் காட்டியவர் போன்றவராவார். அதன் தாக்கம் அண்டை அயலார் மீது மிகவும் உயர்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத்திடம் என்ன முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது என்று எமக்கு தெரியவில்லை என்று ஆட்சேபனை செய்கின்றனர். கோபத்தினால் பீடிக்கப்பட்டிருப்பதாக இழித்துரைக்கப்படுபவர் நமது ஜமாஅத்திற்கு வருகிறார். இது அவர்கள் வெட்கப்படுவதற்கு காரணமானதில்லையா? மனிதன் மிகச் சிறந்ததாகக் கருதி இந்த ஜமாஅத்திற்கு வந்துள்ளான். ஒரு நல்ல மகன் தனது தந்தையின் நற்பெயரை வெளிப்படுத்துவது போன்று பைஅத் செய்தவரும் ஒரு நல்ல மகனின் கட்டளையைப் பெற்றவராவார். எனவே தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூய துணைவியரை நம்பிக்கையாளர்களின் அன்னையர் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது ஹுஸூர் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் தந்தையாக இருக்கின்றார்கள். பௌதீக தந்தை பூமியில் வருவதற்கு காரணமாக இருக்கிறார். வெளிப்டையான வாழ்வுக்கு காரணமாக இருக்கிறார். ஆனால் ஆன்மீக தந்தை வானத்தின் பக்கம் எடுத்துச் செல்கிறார். அசல் தலைமையகத்தின் பக்கம் செல்வதற்கு வழிகாட்டுகிறார். ஒரு மகன் தமது தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதை விரும்புவாரா? இன்னின்ன தீமைகள் உங்களிடம் இருக்கின்றன என்று குற்றச்சாட்டு வைக்கின்றனர். இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துகிறீர்கள். எந்த மகனாவது தமது தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதை விரும்புவாரா? விபச்சாரம் செய்வது, குடித்துக் கொண்டு திரிவது, தந்தைக்கு அவப்பெயர் ஏற்படத்தக்க தீயொழுக்கம் காட்டுவது போன்ற இந்த செயலை எவரும் விரும்பமாட்டார் என்று நான் அறிவேன். எந்த தகுதியற்ற மகனாவது இவ்வாறு செய்தால் மக்களின் வாயை மூட முடியாது. ஒருவர் அவ்வாறு செய்தால் பிறகு உலகம் விரலை உயர்த்தும். மக்கள் அவரது தந்தையாரைக் குறிப்பிட்டு இன்னாரின் மகன் இந்த தீய செயலை செய்கிறான் என்று கூறுவார்கள். ஆகவே அந்த தகுதியற்ற மகன் தானே தமது தந்தையின் அவப்பெயருக்கு காரணமாக அமைவான். இவ்வாறு ஒரு மனிதர் ஓர் இயக்கத்தில் நுழைகிறார். இந்த இயக்கத்தின் கண்ணியத்தைக் கவனத்தில் கொள்வதில்லை. அதற்கு மாற்றமாக நடக்கிறார் என்றால் அல்லாஹ்விடம் அவர் தண்டனைக்குரியவர். அவர் தம்மை மட்டும் அழித்துக் கொள்ளவில்லை. மாறாக மற்றவருக்கும் கூட தீய முன்மாதிரி காட்டி அவர்களையும் நற்பேறு மற்றும் நேர்வழியிலிருந்து விலக்கி விடுகிறார்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனவே உங்கள் சக்தி உள்ள அளவுக்கு இறைவனிடம் உதவி கேளுங்கள். உங்கள் முழு ஆற்றல் மற்றும் தைரியத்துடன் பலவீனங்களை அகற்ற முயற்சி செய்யுங்கள். எளிமையுடன் அவனிடம் வரும் அதே வேளையில் உண்மை மற்றும் நிச்சய உறுதியுடன் கையை உயர்த்துங்கள். ஏனெனில் இறையச்சத்துடன் உயர்த்தப்பட்ட கைகள், உண்மை மற்றும் நிச்சய உறுதியின் தூண்டுதலினால் எழுந்துள்ளது என்றால் அல்லாஹ் அதனை வெறுமையாக அனுப்புவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் எனது அனுபவத்தில் கூறுகிறேன். நமது ஆயிரக்கணக்கான துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஒப்புக் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் கூறுகிறார்கள்: “உறுதியான விஷயமாவது ஒருவர் தமது இனத்திற்காக அனுதாபத்தின் எழுச்சியைப் பெறவில்லை என்றால் அவர் கருமியாவார். நன்மையும் நலனுமே உள்ள ஒரு வழியைக் கண்டால் அதனை மக்களை கூவிக்கூவி அழைத்துக் கூறுவது என் மீது கடமையாகும். நாம் சொல்வதை ஒருவர் செயல்படுத்துகிறாரா? இல்லையா? என்பதை பொருட்படுத்தக் கூடாது”. (மல்.∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 146-147; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆக, நாம் நமது ஒவ்வொரு அமலின் மூலமாகவும் அவர்களின் பைஅத்தில் வந்ததன் மூலம் தூய மாற்றத்தை உருவாக்கியதை நிரூபித்துக் காட்ட வேண்டும். பிறகு மக்களுக்கு அதனைக் கூறவும் வேண்டும். இதுவே தப்லீகின் வழிமுறையாகும். அல்லாஹ் நம்மை தக்வாவின்படி நடந்து நமது நல்லொழுக்கத்தில் மாற்றத்தை உருவாக்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியை முன்னிறுத்தவும் எப்போதும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தவும் வாய்ப்பு தருவானாக. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப வாழ்வை கழிப்பவர் ஆவோமாக.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய லுத்ஃபுர் ரஹ்மான் மஹ்மூது சாஹிப் உடையதாகும். அமெரிக்காவைச் சார்ந்த இவர் மியான் அதாவுர் ரஹ்மான் சாஹிபுடைய மகன் ஆவார். 27 மே 2017 –ல் இவர் வஃபாத்தாகி விட்டார். إنا لله وإنا إليه راجعون

இவரது தந்தை வழிப் பாட்டனார் மியான் கரீமுத்தீன் சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சஹாபி ஆவார்கள். இவர்கள் 1984 –ல் பைஅத் செய்திருந்தார்கள். இவரது மனைவி தாலிஹ் பீபி தமது கணவனுடன் சேர்ந்து பைஅத் செய்திருந்தார். அவர் இவருடைய தந்தை வழிப்பாட்டி ஆவார். ஆனால் உறுதியான ஈமான் கொள்ளவில்லை. தாலிஹ் பீபி ஒரு கனவு கண்டார். அவரது கனவைக் கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், எந்த பெண்ணுக்கு இந்தக் கனவு வந்துள்ளதோ அவளுக்கு என் மீது முழுமையான நிச்சய உறுதி இல்லை. இந்தக் கனவிலிருந்து வெளிப்படுவது இதுதான் என்று கூறினார்கள்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகை மீது நிச்சய உறுதி இல்லை. அவர் முழுமையான நிச்சய உறுதி கொண்டால் அல்லாஹ் அவருக்கு ஒரு மகனை வழங்குவான் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். இவர் காதியானுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்வதற்காக சென்றபோது அல்லாஹ் அவருக்கு ஒரு மகனை வழங்கினான். அந்த பையனுக்கு அதாவுர் ரஹ்மான் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெயர் வைத்தார்கள். இவர்தான் இந்த லுத்ஃபுர் ரஹ்மான் சாஹிபுடைய தந்தையாவார். இவர் நீண்ட காலமாக தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பித்து வந்தார். அறிவியல் பாடம் கற்றுக் கொடுத்தார். நானும் பள்ளிக்கூடத்தில் இவரது மாணவர்களுள் ஒருவனாவேன். மியான் அதாவுர் ரஹ்மான் சாஹிப் உடைய பெரிய மகன் பாகிஸ்தானின் குத்தாமுல் அஹ்மதிய்யா தலைமையக முஃதமிது ஆக பணியாற்றினார். அல் மினார், காலித் பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தார். பிறகு செராலியோன் சென்று விட்டார். ஜமாஅத் பள்ளிக்கூடத்தில் பணியாற்றினார். நீண்ட காலமாக செராலியோனில் இருந்தார். பிறகு அங்கிருந்து ஓய்வு பெற்ற பிறகு அமெரிக்கா சென்று விட்டார். சொற்பொழிவு மற்றும் எழுத்து ஆகிய இரண்டு திறமைகளும் இருந்தன. இவரது கட்டுரைகள் பெரும்பாலும் அல்ஃபஸ்ல் –ல் வெளி வந்துள்ளன.

மஹ்மூது முஜீபு சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை பாகிஸ்தான் வந்திருந்தார். கிலாஃபத் நூலகத்தில் ஒரு சான்றை தேடிக் கொண்டிருந்தார். அமெரிக்க பத்திரிகைகளில் இஸ்லாத்தின் மீதும் திருக்குர்ஆன் மீதும் ஆட்சேபனைகள் எழுதப்படுகின்றன. ஆதாரப்பூர்வமான பதிலை தயாரித்து அனுப்புகிறேன். பெரும்பாலும் பத்திரிகையாளர்கள் எனது கட்டுரையை வெளியிட்டு விடுகிறார்கள் என்று மஹ்மூது லுத்ஃப் ரஹ்மான் சாஹிப் கூறினார். இதற்காகத்தான் நான் கிலாஃபத் நூலகத்தில் சான்றுகளைத் தேடுகின்றேன் என்றார்.

அதாவுல் முஜீபு ராஷித் சாஹிப் எழுதியுள்ளார்: நல்ல பரந்த விரிவான வாசிக்கும் பழக்கம் இருந்தது. மார்க்க விவகாரங்களில் ஆழிய கண்ணோட்டம் உள்ளவர். உருது, ஆங்கிலம் இரண்டிலும் நல்ல புலமை உடையவர். உருதுவில் நிறைய ஆய்வு செய்துள்ளார். நிறைய பொது அறிவு, கட்டுரைகளை சிறப்பான ஞானத்துடன் எழுதியுள்ளார். அறிவிப்பூர்வமான விஷயங்களை திரட்டுவதில் மிகுந்த ஆர்வம் உள்ளவராக இருந்தார். இயக்கத்தின் படைப்புகளை எப்போதும் வாசிப்பவராக இருந்தார். இவருக்கு அதிகமான நண்பர்கள் இருந்தனர்.

கலீல் முபஷ்ஷிர் சாஹிப் என்ற செராலியோனின் பொறுப்புப் பிரச்சாரகர் அமீராக இருந்துள்ளார். அவர் எழுதுகிறார்: 20 வருடங்களை விட அதிகமாக நாங்கள் ஒன்றாக கழித்துள்ளோம். மிக நெருக்கமாக இவரை பார்க்கும் வாய்ப்பு பெற்றுள்ளேன். தனிச்சிறப்புள்ள மனிதர். எளிய மனிதர். பழகுவதற்கு இனியவர். தன்னலமற்றவர். அவரது எளிமையை விளக்க என்னிடம் வார்த்தையில்லை என்று கூறுகிறார். இவை மிகைப்படுத்தப்பட்டவையல்ல. உண்மையிலேயே இவர் இத்தகையவராவார். அல்லாஹ் இவருக்கு எழுத்திலும் சொற்பொழிவிலும் நல்ல ஆற்றலை வழங்கி இருந்தான்.

பிறகு அஹ்மதிய்யா பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தார். பிறகு பேராசிரியர் ஆனார். மிக நல்ல முறையில் ஜமாஅத் அமைப்பின் அனைத்து வேலைகளையும் செய்துள்ளார். தொழுகைகளை உள்ளச்சத்துடன் தொழுபவர். அல்லாஹ்வின் நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்துபவர். சந்தாவை முறைப்படி வழங்குபவர். ஸதகா மற்றும் தானதருமங்கள் செய்பவர். நிதித் திட்டங்களில் சுறுசுறுப்பாக பங்கு பெறுபவர். கிலாஃபத்தின் மீது மிகவும் பற்றும் நேசமும் கொண்ட தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1988 –ல் செராலியோன் சென்றிருந்தபோது அவர் மதிக்கத்தக்க தொண்டுகள் செய்யும் வாய்ப்புப் பெற்றிருந்தார். ஹுஸூரிடம் அவர் காட்டிய மரியாதை மற்றவரும் மதிக்கத்தக்க முன்மாதிரியாக இருந்தது என்று கூறுகிறார்கள். இங்கு வந்தாலும் கூட அவருடைய பழைய தொடர்புகள் இருந்தபோதிலும் கிலாஃபத்திற்குப் பிறகு இவரது நடைமுறை முற்றிலும் மாறியிருந்தது.

நமது முரப்பியான ஃபஸ்ல் ஹமீது ஷாஹித் சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை ஒரு கிறித்தவ பாதிரியார் மக்களை ஒன்று திரட்டி பொய்யான அற்புதத்தை எடுத்து வைத்தார். இவர் அதற்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். கிறித்தவர் வாயடைத்துப் போய் விட்டார். இதனைப் பார்த்து அஹ்மதியல்லாத முஸ்லிம்களும் கூட மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ் இவரை மன்னிப்பானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது சந்ததிகளுக்கும் கூட இவரது நன்மைகளை தொடர வாய்ப்பளிப்பானாக.

இரண்டாவது ஜனாஸா மிர்ஸா உமர் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர்கள் சாஹிப் ஸாதா மிர்ஸா முனவ்வர் அஹ்மது சாஹிப் மர்ஹூம் உடைய மகன் ஆவார்கள். இவர்கள் 5 ஜூன் 2017 அன்று Tahir Heart Institute –ல் மதியம் 2.00 மணிக்கு தமது 67 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إنا لله وإنا إليه راجعون

இவர்கள் எனது வயதை ஒத்தவர். சிறு வயது நண்பர். சிறு வயதில் ஒன்றாக விளையாடியுள்ளோம். பல நற்சிறப்புகள் வாய்ந்தவர். கிலாஃபத்திற்குப் பிறகு குறிப்பாக நான் பார்த்துள்ளேன். எனது அன்பிற்குரியவர்; உறவினர்; ஒரே வயதை உடையவர் என்பதெல்லாம் இருந்தும் சிறு வயதில் இருந்து ஒன்றாக வளர்ந்தோம் என்ற போதிலும் முற்றிலும் மரியாதையும், பிடிப்பும் அவரிடம் காணப்பட்டது. அது ஒரு முன்மாதிரியாகவே ஆகி விட்டது என்று கூற வேண்டும். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

இவரது திருமணம் மேஜர் சயீத் அஹ்மது சாஹிப் உடைய மகளான அமத்துல் காபி சாஹிபா உடன் நடந்தது. இவர் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் உடைய மகள்வழிப் பேத்தியாவார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரது திருமணத்தை நடத்தி வைத்தார்கள். இவர்களுக்கு மொத்தம் 5 குழந்தைகள். 3 மகள்கள், 2 மகன்கள். ஒரு மகள் கடைசிப் பெண் வக்ஃபே நவ் ஆவார். Review of Religion –ல் நன்றாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஒரு மகள் டாக்டர் அஃபிரியா. இங்கு இலண்டனில் வசிக்கிறார். டாக்டர் ஹம்மாத் சாஹிபின் மனைவியாவார். இவர் லஜ்னாவில் பல்வேறு வகையில் கணிசமான தொண்டாற்றியவர். இவரது சகோதரிதான் டாக்டர் அஹ்மத்துல்லாஹ் கான் சாஹிபின் மனைவி டாக்டர் அமத்துல் ஹை சாஹிபா ஆவார். இவர்கள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுபவர்கள். இவரது விருப்பம் எப்போதும் தம்மை வக்ஃப் செய்ய வேண்டும் என்று இருந்தது. எனது கிலாஃபத்தின் தொடக்கத்தில் நான் வக்ஃப் செய்ய விரும்புகிறேன் என்று என்னிடம் வந்து கூறினார். விண்ணப்பத்திலும் எழுதியிருந்தார். இவரது சில திறமைகளைப் பற்றி எனக்கு தெரியும் என்பதல்ல. இவரது வக்ஃபை நான் ஏற்றுக் கொண்டேன். பிறகு ரப்வாவில் நாயிப் சத்ர் உமூமியாக இவரை நியமித்தேன். அல்லாஹ்வின் அருளால் நல்ல முறையில் அப்பணியை செய்தார்.

இவரது மனைவி கூறுகிறார்: இவர் என்னிடம் கூறினார். நான் வக்ஃபிற்காக எழுதியிருந்தேன். அது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பிறகு நான் அங்கு சென்று எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று வழிகாட்டலும் வழங்கி இருந்தேன். குறிப்பாக ரப்வாவை விட்டு தூரத்திலுள்ள பகுதியில் சிலருக்கு தாம் தூரத்தில் விலகி இருப்பதாக உணர்வு உள்ளது. அவர்களை சென்று சந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். கடைசி வரை இந்த வேலையை செய்து வந்தார். மிக நன்றாக செய்து வந்தார். அங்குள்ள மக்கள் ஏழைகள் ஆவர். அவர்கள் மகிழ்ந்தனர். இவரது இயல்பில் மிகவும் எளிமை இருந்தது. சூழ்நிலைகளை நல்ல முறையில் புரிந்து கொண்டு அல்லாஹ்வின் அருளால் மிக நல்ல முறையில் எல்லா விவகாரங்களையும் தீர்த்து வைப்பார்.

சத்ர் உமூமியும் கூட எழுதியுள்ளார். சில விவகாரங்கள் சிக்கலாக இருந்தன. அவற்றை இவரிடம் ஒப்படைத்த போது மிக நல்ல முறையில் தீர்த்து வைத்தார். இவரது பேச்சைக் கேட்டு இரு தரப்பும் திருப்தியும் அடைந்தனர். இன்னும் சொல்வதாயின் சிலர் கூறவும் செய்தனர். தீர்ப்பு பெறுவதானால் இவரிடம் தான் பெற வேண்டும். ஒவ்வொருவரின் பேச்சையும் கேட்டு தீர்ப்பு செய்கிறார். தமது பிள்ளைகளிடமும் மற்றவரின் பிள்ளைகளிடமும் மிகவும் மென்மையும் அன்பும் இருந்தது. கிலாஃபத்துடன் தொடர்போ மிக அதிகமாக இருந்தது. முன்மாதிரியான தொடர்பு என்ற கூற வேண்டும்.

பிள்ளைகளும் எழுதியுள்ளனர். இவரது மனைவியும் எழுதியுள்ளனர். மற்றவரும் எழுதியுள்ளனர். ஏனெனில் இவரது கடைசி நோயான கேன்சரின் நோயிலும் கூட சற்று தெம்பு ஏற்பட்டாலும் கூட உடனே அலுவலகத்திற்குச் செல்வார். காரணம் கடந்த நாட்களில் இங்கு வந்திருந்தபோது

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

**திருக்குர்ஆனிலிருந்து...**

*இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)*

**மர்ஹூமா இலைஹி ஜைனப் கனி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.A.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் -களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## கனடா பாராளுமன்றத்தில் பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு இருந்தது. அப்போது ஹுஸூர் அவர்கள் வழங்கிய முக்கிய போதனைகள்

**حُبُّ الْوَطَنِ مِنَ الْإِيْمَانِ நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும். இந்த தூதுச் செய்திக்கேற்ப செயல்பட்டால் நாட்டில் எந்தவொரு மோசமான நிலைமையும், தீங்கும் ஏற்படாது. அரசாங்கத்திற்கு எந்தக் கவலையும் இருக்காது. ஒவ்வொருவரும் நாட்டிற்காக நன்மையை நாடுபவராகவும் நன்றியுணர்வுமிக்கவராகவும் இருப்பர். எந்தவொரு கட்சியும் எந்தவொரு பிரிவும் நாட்டிற்கு எதிராக செயல்படாது. மேலும் நாட்டில் அமைதி நிலைநாட்டப்படும்.**

**ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும். மற்றவர்களது உரிமைகளைப் பறிக்கக் கூடாது. ஒவ்வொருவரும் மற்றவர்களது உரிமைகளைச் செலுத்தக்கூடியவராக இருந்தால் பிறகு சமுதாயத்தில் அமைதி ஏற்படும்.**

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

### மூன்றாம் பகுதி

அதற்கு பிறகு நிகழ்ச்சிக்கேற்ப ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் *Parliament Hill* -ன் இரண்டாவது மாடிக்கு வந்தார்கள். அங்கு ஒரு ஹாலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தரப்பிலிருந்தும் சிற்றுண்டிக்கான ஏற்பாடு இருந்தது. இந்த தருணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக ஹுஸூர் அவர்களைச் சந்திப்பதாக இருந்தது. அவ்வாறே பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் பின் மற்றொருவர் ஹுஸூர் அவர்களிடம் வந்து உரையாடிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது. இந்நிகழ்ச்சி ஏறக்குறைய ஒரு மணி நேரம் வரை நீடித்தது. இந்த தருணத்தில் ஏறக்குறைய முப்பத்திற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய அரசு உயர் அதிகாரிகளும் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும் நற்பேற்றைப் பெற்றனர். இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தவாறு ஹுஸூர் அவர்களுடன் *Group Photo* -வும் எடுத்துக் கொண்டனர்.

இதற்குப் பிறகு இதே ஹாலின் ஒரு பகுதியில் ளுஹர், அஸ்ர் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு செய்யப் -பட்டது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ளுஹர் அஸ்ர் தொழுகைகளை ஜம்அ செய்து தொழுதார்கள்.

கனடா பாராளுமன்ற வரலாற்றில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முதலாவது ஜமாஅத்தான தொழுகையாக இது இருந்தது. இதற்கு முன்னர் இந்தக் கட்டிடத்தில் இதுபோன்ற சம்பவம் ஒருபோதும் நடந்ததில்லை.

ஹுஸூர் அவர்கள் தொழுது முடித்ததும் வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களைச் சந்திப்பதற்காக வந்தனர். இவர்கள் அனைவரும் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கின்ற நற்பேற்றைப் பெற்றனர். ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் இவர்கள் அனைவரிடமும் உரையாடினார்கள். அதற்குப் பிறகு அவர்கள், ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்து கொண்டனர். இந்நிகழ்ச்சி சிறிது நேரம் வரை நீடித்தது. இதற்குப் பிறகு நிகழ்ச்சிக்கேற்ப ஹுஸூர் அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆறாவது மாடியிலுள்ள *Spousal Longue* -ற்குச் சென்றார்கள். இங்குதான் மதிய உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு சிறிது நேரம் ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத் -திற்கு வெளியிலுள்ள ஒரு பூங்காவிற்குச் சென்று சற்று உலாவினார்கள். பல அஹ்மதி சகோரர்களும், சகோதரிகளும் பாராளுமன்றத் -திற்கு வெளியே இருந்தனர். அவர்கள் ஹுஸூர் அவர்களைப் பார்த்ததும் மின்மினிப் பூச்சிகளைப் போன்று அவர்களுக்கு அருகில் ஒன்று திரண்டனர். ஹுஸூர் அவர்களை நேரில் கண்டு மகிழ்ந்தனர். இளைஞர்கள், சிறுவர்கள், சிறுமிகள் தங்களது கேமராக்கள் மூலம் தனது அன்பு கலீஃபாவை புகைப்படம் எடுத்துக் கொண்டனர். ஹுஸூர் அவர்கள் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்த இந்த சமயத்தில் இந்த எல்லா மக்களும் தங்களது எஜமானருக்கு அருகில் ஒன்று திரண்டிருந்தனர். மேலும் அருள்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் *Parliament Hill* -ற்குத் திரும்பி வந்தார்கள். நிகழ்ச்சிக்கு ஏற்ப 2.00 மணி 45 நிமிடத்திற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் *Visit Gallery* -ற்கு அழைத்து வரப்பட்டார்கள். மேலும் சிறப்பு இருக்கையில் அமர்த்தப்பட்டார்கள்.

ஹுஸூர் அவர்களின் வருகைக்கு முன்னதாக பாராளுமன்ற உறுப்பினரான *Judy Sugo* அவர்கள் கீழ்க்காணும் *Statement* -ஐ பாராளுமன்றத்தில் வாசித்திருந்தார்கள். (இன்று சிறிது நேரத்திற்கு முன்னதாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் முறையாக சுற்றுப் பயணம் மேற்கொள்வதற் -காக ஒடோவாவிற்கு வந்துள்ளார்கள். இந்த சுற்றுப்பயணத்தின்போது கேபினட் அமைச்சர் -களையும், மேல்சபை உறுப்பினர் களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், பிரதமர் அவர்களையும் அவர்கள் சந்திப்பார்கள். இந்த சந்திப்புகளின் மூலமாக “எல்லாரிடத்திலும் அன்பு. எவரிடத்தும் இல்லை வெறுப்பு” என்ற தூதுச் செய்தியை பரப்புவதே அவர்களின் நோக்கமாகும். மார்க்கத்தின் அமைதியை விரும்புகின்ற அழகிய முகத்தை மக்களுக்கு முன்னால் எடுத்துக்காட்டுவதற்கு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்கள். நாம் இஸ்லாத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாதத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் அவர்கள் சுற்றுப் பயணத்தில் இங்கு வந்துள்ளார்கள். நாம் உலகிலுள்ள எல்லா வல்லரசுகளுக்கும் அவர்கள் அமைதி, மார்க்க சுதந்திரம், மனித உரிமைகளைப் பேணுவது ஆகிய விஷயங்களில் கனடாவுடன் இணைந்து செயல்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

நாம் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கும் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் அவர்களது அயராத உழைப்பிற்காக எங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் உங்கள் பக்கம் என்னுடைய மற்றும் கனடா மக்களின் நட்பின் கரங்களை நீட்டுகின்றோம். பாராளுமன்ற அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி).

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாராளுமன்ற நிகழ்ச்சிகளைச் செவிமடுத்தார்கள். அதற்குப் பிறகு பாராளுமன்ற சபாநாயகரான *Mr. Geolf*

**S. MABU**
87541 71700
81240 22479
90955 89992
78719 66352

**STAR ORGANIC**
TERRACE GARDEN DIVISION

- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools

Email: Starorganicmabu@gmail.com
**THARPOLIN + POULTRY EQUIPMENTS SALES**
**TIRUNELVELI DIST.**

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

*Regan* அவர்கள் எழுந்து நின்று இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள். நான் இப்போது எல்லா கண்ணியத்திற்குரிய அவையோரின் கவனத்தையும் *Gallery* -யின் பக்கம் திருப்ப விரும்புகின்றேன். இன்று நம்மிடையே உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் இருக்கின்றார்கள்.

இவ்வாறு அவர்கள் அறிவிப்பு செய்ததும் எல்லாவற்றிற்கும் முதலாவதாக பிரதமர் *Justin Tradeau* அவர்கள் எழுந்து நின்றார்கள். அவர்களுடன் சேர்ந்து அவையில் இருந்து அனைவருமே எழுந்து நின்று கரவொலி எழுப்பியவாறு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை வரவேற்றார்கள்.

உலகிலுள்ள பாராளுமன்றங்களில் முதன் முறையாக இந்த பாராளுமன்றத்தில்தான் இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதாவது பாராளுமன்ற அவையில் உள்ள அனைவரும் எழுந்து நின்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை தங்களது நாட்டிற்கு வரவேற்றவாறு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய 'அந்த அரசர் வந்தார்' என்ற இறையறிவிப்பு இன்று இன்னொரு புது மகிமையுடன் நிறைவேறியது. அதாவது ஒரு பெரிய நாட்டின் உலகியல் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் தங்கள் அரசருடன் (பிரதமருடன்) சேர்ந்து ஒரு ஆன்மீக அரசரை கண்ணியப் -படுத்தும் வகையில் எழுந்து நின்றனர். கலீஃபத்துல் மஸீஹின் பக்கம் தங்களது பார்வையைச் செலுத்தியவாறு தங்களது இந்த செயல் மூலம் 'அந்த அரசர் வந்து விட்டார்' என்பதை உண்மைப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மீண்டும் ஆறாவது மாடியில் இருந்த *'Spousal Longue'* ற்கு வந்தார்கள். சிறிது நேரம் கழித்த பிறகு *Minister of Public and Emergency preparedness* ஆக இருக்கும் மாண்புமிகு *Hon Ralph Goodate* அவர்கள் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கின்ற நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். இவர்கள் ஹுஸூர் அவர்களிடம் நான் ரெஜைனா பகுதியைச் சார்ந்தவனாவேன். உங்களது பள்ளிவாயில் துவக்க நிகழ்ச்சி நடக்கின்ற சந்தர்ப்பத்தில் அதில் கலந்து கொள்ள நான் முயற்சி செய்வேன் என்று கூறினார். மேலும் ஹுஸூர்! நீங்கள் அதிகமாக பயணத்தில் இருக்கின்றீர்கள் என்றும் கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கனடாவில் எனது முந்தைய சுற்றுப் பயணம் 2013 -ல் இருந்தது. நான் கனடாவின் மேற்கத்திய பகுதிகளான வேங்கூரிற்கும், கேல்கரியிற்கும் வந்திருந்தேன். இதற்கு முன்னதாக 2012-ல் நான் டொரேண்டோ வந்திருந்தேன். ஏனைய மற்ற நாடுகளுக்கும் கூட சுற்றுப் பயணம் செல்ல வேண்டியது இருக்கின்றது. ஏனைய பல நிகழ்ச்சிகளும் முடிவு செய்யப்படுகின்றது. எனவேதான் இங்கு பல நாட்கள் கழிந்த பிறகு நான் வந்துள்ளேன் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

அமைச்சர் அவர்கள் உங்களது இயக்கத்தைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை என்ன? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள் உறுதியான கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட அஹ்மதிகள் 16 முதல் 17 மில்லியன் வரை இருப்பர். ஏனைய பல உறுப்பினர்களும் எத்தகைய அஹ்மதிகளாக இருக்கின்றனர் என்றால் அவர்களுக்கு இதுவரை ஜமாஅத்துடன் வலுவான தொடர்பும் உறவும் ஏற்படவில்லை. இவர்கள் தொடர்பாக, இவர்கள் ஒருபோதும் தீவிரவாதிகளாக ஆக மாட்டார்கள் என்று என்னால் கூற முடியும் என்று கூறினார்கள்.

☆ அமைச்சர் அவர்கள் உங்கள் இயக்கத்தை சார்ந்தவர்கள் தீவிரவாதிகளாக ஆகாமல் இருக்கும் வகையில் உங்கள் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களுக்கு நீங்கள் எப்படி பயிற்சி கொடுக்கின்றீர்கள்? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ்வின் அருள் இருக்கின்றது. எங்களது பயிற்சியின் அமைப்பு எவ்வாறு இருக்கின்றது என்றால் நாங்கள் சிறு வயதிலிருந்தே தர்பிய்யத் வழங்குகின்றோம். அல்லாஹ்வை வணங்க வேண்டும். மக்களை நேசிக்க வேண்டும். உங்களது நாட்டை நேசிக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்காக பணிபுரிய வேண்டும். எப்போதும் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதை நாங்கள் சிறு வயதிலிருந்தே எங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றோம். எங்களது நிகழ்ச்சிகளிலும் பள்ளிவாயில் -களிலும், கூட்டங்களிலும், எங்களது ஜாமிஆக் -களிலும், எங்களது கல்வி நிறுவனங்களிலும், சபைகளிலும் எல்லா இடங்களிலும் இதைத் தான் நாங்கள் கற்றுக் கொடுக்கின்றோம்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: இவ்விஷயத்தில் அல்லாஹ்வின் அருள் இருக்கின்றது. நான் டென்மார்கில் ஒரு இளைஞரைச் சந்தித்தேன். அவர் இஸ்லாத்தை விட்டும் வெகு தூரம் விலகிச் சென்றிருந்தார். தீவிரவாதிகளுடன் அவர் சேர்ந்து விட்டார். அவரது நண்பர்களில் ஒருவர் தாயிஷ் தீவிரவாதிகளுடன் சேர்ந்து விட்டார். இன்னொருவர் மது அருந்துவதில் மூழ்கி இருந்தார். அவர்களின் இந்த நிலைமைகளைப் பார்த்த பிறகு அவருக்கு அஹ்மதிய்யத்தான் அசல் மற்றும் உண்மையான இஸ்லாமாக இருக்கின்றது என்பது அவருக்கு தெரிய வந்தது. பிறகு அவர் திரும்ப வந்து விட்டார். பிறகு என்னைச் சந்திக்கவும் செய்தார்.

தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஏழு வயதிலிருந்து எங்களது சிறுவர்களும் சிறுமிகளும் தத்தமது அமைப்பு -களில் இணைகின்றனர். சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தனித்தனி அமைப்புகள் இருக்கின்றன. அங்கு அவர்களுக்கு மார்க்க அறிவு கற்றுத் தரப்படுகின்றது. மரியாதைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. நல்லொழுக்கப் போதனைகள் வழங்கப்படுகின்றன. விளை-யாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அஹ்மதிகளாகிய நாங்கள் எங்கள் சிறுவர்கள் மற்றும் இளைய தலைமுறையின் கல்வியின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துகின்றோம். இதன் காரணமாகவே அஹ்மதிகள் கல்வியில் முன்னேறிச் செல்கின்றனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதில் தாய் தந்தையின் பங்கும் இருக்கின்றது. அவர்கள் தமது குழந்தைகளைக் கண்காணிக்க வேண்டும். அவர்களால் முடிந்த வரை தங்கள் குழந்தைகளை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் உலகில் எங்கு சென்றாலும் அஹ்மதிகளின் ஒழுக்கம் மற்றவர்களைவிட மாறுபட்டிருப்பதை உங்களால் பார்க்க முடியும். நைஜீரியாவில் போக்கே ஹராம் பிரிவைச் சார்ந்தவர்கள் நாட்டில் அழிவைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அங்கு ஒரு மில்லியன் அஹ்மதிகள் நாட்டிற்காக தொண்டு புரிந்து வருகின்றனர். இதற்கான காரணம் நாங்கள் சிறு வயதிலிருந்தே எங்கள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தைக் கற்றுத் தருகின்றோம். அவர்களது கல்வி மற்றும் பயிற்சிக்கான ஏற்பாட்டை செய்கின்றோம்.

☆ இதை கேட்ட அமைச்சர் அவர்கள், நீங்கள் மிகவும் நல்ல முறையில் செயல்படுகின்றீர்கள். உங்களை சந்தித்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. மீண்டும் ஒருமுறை கனடாவிற்கு தாங்கள் வந்திருப்பதற்காக நான் உங்களை வரவேற்கின்றேன் என்று கூறினார். அமைச்சருடன் இந்த சந்திப்பு 3 மணி 50 நிமிடங்கள் வரை நீடித்தது. அதற்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினரான *Judy Sugro* அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் உங்களது ஜமாஅத்தைச் சார்ந்த பல மக்களும் பாராளுமன்றத்திற்கு வெளியில் இருக்கின்றனர். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இங்கு பாராளுமன்றத்தில் வருகை தந்தது எங்களுக்கு மிகவும் பெருமை சேர்க்கின்ற விஷயமாக இருக்கின்றது என்று கூறினார். மேலும் இறுதியாக அவர்கள் ஹுஸூர் அவர்களுக்காக தமது நல்ல விருப்பங்களையும் ஆசைகளையும் வெளிப்படுத்திக் கூறியவாறு ஹுஸூர் அவர்களிடம் தனக்காக துஆ செய்யுமாறு வேண்டினார்கள்.

(தொடரும்...)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள்
சகோதரர்கள் ஆவர். எனவே
சகோதரர்களுக்கிடையில் நீங்கள்
சமாதானத்தை ஏற்படுத்துங்கள்.
உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு,
நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.
(49:11)

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

(பத்ர் தமிழ் தொகுதி 2 இதழ் 22 -ன் தொடர்ச்சி...)

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இன்று பல பிரச்சனைகளின் காரணமாகவும், வேலை கிடைக்காமல் இருப்பதன் காரணமாகவும் மக்களிடம் அமைதியின்மை இருக்கின்றது. மக்களுக்கு வேலை கிடைப்பதற்கும், நீங்கள் முன்னேற்றத்தைப் பெறுவதற்கும் முயற்சி செய்யுங்கள்.

ஹுஸுர் அவர்களுடன் இந்த இரண்டு மேல் சபை உறுப்பினர்களின் சந்திப்பு 20 நிமிடங்கள் வரை நீடித்தது. இதற்குப் பிறகு கீழ்க்காணும் மூன்று அரசு உயர் பதவியிலுள்ளவர்கள் ஹுஸுர் அவர்களைச் சந்தித்தனர்.

(1) பாராளுமன்ற உறுப்பினரான பாமீலா கோல்டு ஸ்மித் (இவர்கள் வெளி விவகாரத்துறை அமைச்சகத்தின் பாராளுமன்ற செயலரும் ஆவார்கள்.)

(2) Passcale Massot (இவர்கள் வெளி விவகாரத்துறை அமைச்சகத்தின் அலுவலகத்தில் ஆசியா பசிபிக்கிற்கான பாலிஸி அட்வைஸர் ஆவார்கள்.)

(3) ஜுலியானா நதாலி (இவர்கள் வெளி விவகாரத்துறை அலுவலகத்தில் சிறப்பு ஆலோசகரும் Preve Council Office -ன் Chief of Staff ஆவார்கள்.)

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹுஸுர் அவர்களிடம் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம். நீங்கள் இங்கு வந்ததில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறினர். Human Rights Freedom -ன் அலுவலகத்தைச் சார்ந்த அதன் பிரதிநிதி தனது அலுவலகத்தைப் பற்றி அறிமுகம் செய்தவாறு எங்களது நிகழ்ச்சிகள் இவையாகும். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இணைந்து பணி செய்து கொண்டிருக்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எங்களுக்கு தொடர்பு இருக்கின்றது. உங்களது இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு என்ன அனுபவங்கள் உள்ளன என்பதைப் பற்றி உங்களது ஜமாஅத் எங்களுக்கு தெரிவித்திருக்கின்றது என்று கூறினார்.

அதற்கு ஹுஸுர் அவர்கள் நான் துஆ செய்கின்றேன். நீங்கள் என்ன திட்டத்தை உருவாக்கியுள்ளீர்களோ அதற்கேற்ப நீதியுடன் செயல்படுவதற்கான ஆற்றலையும் நல்வாய்ப்பை -யும் அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. நீங்கள் அவ்வாறு செய்தால் உங்களது அலுவலகம் சிறப்பாக செயல்படுவது நிரூபணமாகும் என்று கூறினார்கள்.

பாராளுமன்ற செயலர் அவர்கள் முதலில் மார்க்க சுதந்திரத்திற்கென்று அவர்கள் ஒரு செயலரை நியமித்திருந்ததாகவும் இப்போது நாட்டின் பிரதமரிடமும் நீங்கள் ஒவ்வோர் இடத்திலும் மார்க்க சுதந்திரத்திற்காகவும் பணியாற்ற வேண்டும் என்று நாங்கள் கூறியுள்ளோம் என்று கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் இது மிகவும் நல்ல விஷயமாகும். ஆனால் மார்க்க சுதந்திரத்தை மட்டும் நீங்கள் முன்னிலைப்படுத்தக் கூடாது. மாறாக, எல்லா வகையான சுதந்திரத்தையும் நீங்கள் முன்னிலைப்படுத்த வேண்டும். அதன் மூலம் மக்களுக்கு எல்லா வகையான சுதந்திரமும் கிடைக்க வேண்டும் என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்.

பாராளுமன்ற செயலர் அவர்கள் ஹுஸுர் அவர்களிடம் உங்களது கனடா சுற்றுப் பயணத்தின் நோக்கம் என்ன? என்று கேட்டார். இதற்கு ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எனது இயக்கத்தைச் சார்ந்த மக்களை சந்திப்பதற் -காகவே நான் இங்கு வந்துள்ளேன். இவர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும், இவர்களுக்கு இருக்கின்ற பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்காகவும், இவர்களுக்கு கல்வியும் பயிற்சியும் வழங்குவதற்காகவும், இவர்கள் தமது நாட்டிற்காக நன்றியுணர்வுடன் நடந்து கொள்பவர்களாகவும் ஆக வேண்டும் என்பதற்காகவும் நான் இங்கு வந்துள்ளேன். இதைத் தவிர நான் உங்களையும் சந்திக்க வேண்டும். இதைத் தவிர வேறு சில நிகழ்ச்சிகளும் உள்ளன என்று கூறினார்கள்.

இந்த சமயத்தில் ரெஜய்னா மற்றும் லார்டு மினிஸ்டரில் பள்ளிவாயில்களின் துவக்க நிகழ்ச்சி பற்றி கூறப்பட்டது. அமீர் சாஹிப் அவர்கள் இனிவரும் வருடத்தில் சிஸ்காடவுனிலும் பள்ளிவாயில் துவக்க நிகழ்ச்சி இருக்கும் என்று கூறினார்கள். பாராளுமன்ற உறுப்பினரான பாமீலா கோல்டு ஸ்மித் அவர்கள் Vengor -ல் உள்ள பள்ளிவாயிலைப் பார்ப்பதற்கு நான் அங்கு வர விரும்புகின்றேன் என்று கூறினார். ஹுஸுர் அவர்கள் நீங்கள் வருவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார்கள். ஜமாஅத்தின் வெளி விகாரத்துறை செயலரான ஆஸிஃப் கான் சாஹிப் அவர்களும் நாங்கள் அதற்கான ஏற்பாட்டை செய்து விடுவோம் என்று கூறினார்கள்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரான பாமீலா அவர்களிடம் நீங்கள் யூ.கே -யில் நடைபெறும் ஆண்டு மாநாட்டிற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார்கள். மேலும் அவர்களிடம் அங்கு எங்களது ஆண்டு மாநாடு ஒரு விவசாய நிலத்திலேயே நடைபெறுகிறது. தற்காலிகமாக அங்கு ஒரு கிராமம் உருவாக்கப் -படுகின்றது. முழு அமைப்பும் அங்கு தற்காலிகமாகத்தான் செயல்படுகின்றது. இந்த எல்லா ஏற்பாடுகளும் மூன்று நாட்களுக்காக மட்டுமே செய்யப்படுகின்றது. உணவு சமைப்பது மற்றும் உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள், விருந்தினர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள், அனைத்து அடிப்படைத் தேவைகள், முதலுதவிக் -கான ஏற்பாடு, தற்காலிக மருத்துவமனை ஆகிய அனைத்து ஏற்பாடுகளுடன் ஒரு தற்காலிக நகரம் அங்கு குடியமர்த்தப்படுகிறது. இந்த எல்லா ஏற்பாடுகளும் மாநாடு நடைபெறுவதற்கு ஒன்றிரண்டு வாரங்கள் முன்னதாக ஆரம்பிக்கப் -படுகின்றது. மாநாடு நடந்து முடிந்து ஒரு வாரம் கழிந்ததும் நீங்கள் மீண்டும் அந்த இடத்தை விவசாய நிலமாகவே காண்பீர்கள்.

இந்த சமயத்தில் பாராளுமன்ற உறுப்பினரான Judy Sugro அவர்கள், தான் இரண்டு வருடத்திற்கு முன்னர் யூ.கே ஆண்டு மாநாட்டிற்கு சென்று இருந்தேன். அங்கிருந்து நல்ல தாக்கத்தைப் பெற்று நான் திரும்பி வந்தேன். அங்கு நான் பல மக்களையும் சந்தித்தேன். அவர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்தனர். எனது நேரமும் நல்ல முறையில் கழிந்தது. நீங்களும் அங்கு சென்றால் பல மக்களையும் உங்களால் சந்திக்க முடியும். மிகவும் சிறந்த சந்தர்ப்பமாக அது இருக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினரான பாமீலா அவர்களிடம் அவர் கூறினார். இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஹுஸுர் அவர்களின் இந்த சந்திப்பு 12-15 மணி வரை நீடித்தது.

*(தொடரும்...)*

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
Metro Zone
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coibatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 13 July 2017 Issue No. 28

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

(குத்பா தொடர்ச்சி...)

அலுவலகத்திற்கு போய் வந்து இருக்க வேண்டும் என்று நான் கூறியிருந்த காரணத்தால் அவ்வாறு செய்தார். காலத்தின் கலீஃபாவின் கட்டளை அலுவலகத்திற்கு போய் வந்திருக்க வேண்டும் என்பதாகும். எனவே அவர் நோயையும் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து அலுவலகம் சென்று வந்தார். இந்த நிலையிலும் கூட நோயுடன் மிகவும் உழைத்து தமது பணியை செய்து வந்தார்.

மகள் கூறுகிறார்: இங்கு வந்தபோது டாக்டர்கள் பார்த்து விட்டு உங்களது நோய் மிகவும் ஆபத்தானது என்று கூறினார். அதற்கு இவர், சரிதான். அல்லாஹ் தாம் விரும்புபவருக்கு குணமளிப்பான். அவன் விரும்பும் வரை வாழ்வையும் கொடுப்பான். எனக்கு அது குறித்து கவலை இல்லை என்று கூறினார். இதனைக் கேட்டு அந்த ஆங்கிலேயர் வியந்தார். இத்தகைய நோயாளிகள் பதற்றமடைந்திருப்பர். இவரோ மிகவும் தைரியத்துடன் பேசுகிறார் என்று வியந்தனர்.

அதுபோன்று டாக்டர் நூரி சாஹிப் எழுதுகிறார்: இவருக்கு மூன்று நோய்கள் இருந்தன. சர்க்கரை நோயும் இருந்தது. இதய நோயும் இருந்தது. கல்லீரலில் கேன்சரும் இருந்தது. ஆனால் மிகவும் தைரியத்துடன் எல்லா நோயையும் எதிர்த்து நின்றார்.

நூரி சாஹிப் கூறுகிறார்: நல்ல பல ஒழுக்கங்களை உடையவராக இருந்தார். நான் நோயின் நாட்களில் பார்த்துள்ளேன். எந்த முறையீடும் இவரது நாவில் வந்ததில்லை. எப்போதும் 'அல்ஹம்துலில்லாஹ்' நன்றாக இருக்கிறேன் என்றே கூறுவார். டாக்டர் அல்லது ஏதாவது விருந்தாளி சந்திக்க வந்தால் சைக்கினையாக அருகில் அமருமாறு கூறுவார்.

கமர் சுலைமான் சாஹிப் கூறுகிறார்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வஃபாத் சமயத்தில் நான் இலண்டன் வந்தபோது ஒரு ஒட்டப்பட்ட கவரை தந்தார். இது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. பிறகு என்னிடம், இது எனது பைஅத் கடிதமாகும். ஐந்தாவது கலீஃபா யார் தேர்ந்தெடுக்கப்படு –கிறார்களோ அவர்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுக்கவும் என்று கூறினார். கிலாஃபத் அமைப்பு தொடரும். அது உண்மையானது என்ற உறுதி இருந்தது.

சத்ர் உமூமி சாஹிபும் எழுதியுள்ளார்: மிகவும் பல சிறப்புகளை உடையவர். எந்தப் பணியைக் கொடுத்தாலும் அதனை செய்து முடித்து ரிப்போர்ட் தராமல் மூச்சு விடமாட்டார்.

அதுபோன்று இன்னும் நிறைய பேர் கடிதம் எழுதியுள்ளனர். இவர் பணிவு, எளிமை, அன்புடன் நடந்து கொள்வது, கிலாஃபத்துடன் வைத்திருந்த சிறப்பான தொடர்பு பற்றி எல்லாருமே எழுதியுள்ளார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது பிள்ளைகளுக்கும் இவரது நன்மைகளை தொடரவும், கிலாஃபத்துடன் தொடர்புடன் இருக்கவும் வாய்ப்பளிப்பானாக.

★ ★ ★ ★ ★

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS
DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic)
Tirunelveli - 627 005.

ரஹ்மானியா மேல்நிலைப் பள்ளி
ரஹ்மானியா தொடக்கப் பள்ளி
ரஹ்மானியா மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர் ✆ 94869 37769

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*இஸ்லாமிய அறிஞர் பெருமக்களே! என்னை பொய்ப்படுத்துவதற்கு நீங்கள் அவசரப்படாதீர்கள். ஏனெனில் மனிதனால் விரைந்து புரிந்து கொள்ள முடியாத இரகசியங்கள் பெருமளவில் இருக்கின்றன. ஒரு விஷயத்தை செவிமடுத்த அதே சமயத்தில் அதனை நிராகரிக்கத் துணிந்து விடாதீர்கள். இது தக்வா என்னும் இறையச்சத்திற்குரிய வழி அல்ல. உங்களிடையே சில தவறுகள் உண்டாகாமலிருந்தால், நீங்கள் சில ஹதீதுகளின் பொருள்களைத் தவறாகப் புரிந்திருந்தால் தீர்ப்பு வழங்கக் கூடியவரான வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையே வீணானதாக ஆகியிருக்கும். உங்களுக்கு முன்னால் நீங்கள் கற்றுக் கொள்வதற்குரிய ஓர் இடம் இருக்கிறது. அதாவது, எவ்விஷயத்தைப் பற்றி நீங்கள் வலியுறுத்திக் வருகிறீர்களோ மேலும் எந்த இடத்தில் நீங்கள் உங்கள் பாதத்தை வைத்து வருகிறீர்களோ அதே இடத்தின் மீதே யூதர்களும் கால் வைத்து வந்தார்கள். அதாவது, நீங்கள் எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) மீண்டும் வருவார் என்று காத்திருக்கின்றீர்களோ அவ்வாறே அவர்களும் இல்யாஸ் (அலை) மீண்டும் வருவார் என்று எதிர்பார்த்து வந்தனர். வானத்திற்கு உயர்த்தப்பட்ட இல்யாஸ் நபி மீண்டும் உலகத்திற்கு வந்த பின்பே மஸீஹ் வருவார் என்றும் எவர் இல்யாஸ் மீண்டும் வருவதற்கு முன்னர் தன்னை மஸீஹ் என்று வாதம் புரிவாரோ அவர் பொய்யராவார் என்றும் கூறி வந்தார்கள். அவர்கள் ஹதீதுகளின் படி மட்டும் இந்த எண்ணத்தை கடைபிடிக்கவில்லை. மாறாக மலாக்கி நபிக்கு அருளப்பட்ட தெய்வீக கிரந்தத்தையும் இதற்கு ஆதரமாகக் காட்டி வந்தார்கள்.*

*ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) யூதர்களின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகத் தாம் தோன்றியிருப்பதாக வாதம் புரிந்தபோது அந்த வாதத்திற்கு நிபந்தனையாக இருந்த இல்யாஸ் நபி வானத்திலிருந்து இறங்காதபோது அந்த யூதர்களின் எல்லா நம்பிக்கைகளும் பொய்யாகிப் போனது நிரூபிக்கப்பட்டன. மேலும் இல்யாஸ் பூத உடலுடன் வானத்திலிருந்து இறங்குவார் என்ற அந்த யூதர்களின் எண்ணத்திற்கு மாறாக இல்யாஸின் குணத்திலும் பண்பிலும் யாராவது வேறொரு மனிதரே வெளிப்படுவார் என்ற பொருளே இறுதியில் தெளிவாயிற்று. இப்பொருளையே நீங்கள் வானத்திலிருந்து மீண்டும் இறக்க விரும்பும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அளித்துள்ளார்கள். ஆகவே உங்களுக்கு முன் எந்த இடத்தில் யூதர்கள் தடுமாற்றம் அடைந்தார்களோ அதே இடத்தில் நீங்களும் ஏன் தடுமாற்றம் அடைகிறீர்கள்? உங்களது நாட்டில் ஆயிரக்கணக்கான யூதர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்போது நீங்கள் கொண்டிருக்கும் இதே நம்பிக்கை யூதர்களின் நம்பிக்கையாக இருக்கவில்லையா? என்பதனை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ஆகவே இறைவன் ஹஸ்ரத் ஈஸாவுக்காக எலியா நபியை வானத்திலிருந்து இறக்கிக் கொடுக்கவில்லை. எனவே அதன் விளக்கத்தை யூதர்களுக்கு முன் வேறு விதமாக விவரித்துக் காட்ட வேண்டிய நிலை அவருக்கு உண்டாயிருக்கும் போது நீங்கள் மீண்டும் இறங்கவிருக்கும் ஈஸாவை மட்டும் அவ்விறைவன் உங்களுக்கு எவ்வாறு இறக்கித் தருவான்? அவருடைய தீர்ப்பை நீங்கள் நிராகரிக்கக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு சந்தேகம் இருக்குமேயானால் இலட்சக்கணக்கான கிறித்தவர்கள் இந்நாட்டில் இருந்து வருகிறார்கள். அவர்களது பைபிளின் புதிய ஏற்பாடும் இருந்து வருகிறது. ஆகவே மீண்டும் வர வேண்டிய எலியா என்பவர் யோவானாகிய யஹ்யாவே என்று ஈஸா கூறியது உண்மை இல்லையா? என்பதனை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) இவ்விஷயத்தை வெளிப்படுத்தியதன் மூலம் யூதர்களின் பழைய விசுவாசங்களை தவிடுபொடியாக்கினார்கள். இப்போது ஹஸ்ரத் ஈஸா நபியே வானத்திலிருந்து வர வேண்டியது அவசியமென்றால் அவர் உண்மையான நபியாக இருக்க முடியாது. ஏனெனில் வானத்திலிருந்து திரும்பி வருவது இறைவனது நடைமுறைக்கு உட்பட்டது என்றால் இல்யாஸ் நபி மீண்டும் வராததேன்? மேலும் இந்த இடத்தில் யஹ்யாவை இல்யாஸாக தீர்மானித்து விவரிக்க வேண்டிய நிலை உண்டானதேன்? அறிவாளிகளுக்கு இது சிந்தனைக்குரிய ஓர் இடமாகும்.*

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 73)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad